பெற்றிருப்பதைவிட... இப்போது நினைவில் கொள்ளுங்கள், ஆர்ப்பரிப்பதை நான் விசுவாசிக்கிறேன், அந்நிய பாஷைகளில் பேசுவதை நான் விசுவாசிக்கிறேன்,

தேவன் சொன்ன ஒவ்வொன்றையும் நான் விசுவாசிக்கிறேன், ஒவ்வொரு அற்புதத்தையும், ஒவ்வொரு அடையாளத்தையும் நான் விசுவாசிக்கிறேன்; ஆனால் மற்ற எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பெற்றிருப்பதைவிட, இதைப் பெற்றிருக்கவே நான் விரும்புகிறேன். நீங்களும் இதைப் பெற்றிருக்கவே விரும்பமாட்டீர்களா? எல்லா சத்தத்தையும்... பெற்றிருப் பதைவிட, உண்மையிலேயே இனிமையும் சாந்தமும் நிறைந்த அந்தப் பரிசுத்த ஆவியானவர் என் வாழ்க்கைக்குள் வந்து, உலக காரியங்கள் அனைத்தையும் அகன்றுபோகச் செய்வதையே நான் விரும்புகிறேன்.

125 இப்போது, ஆர்ப்பரிப்பதை நான் விசுவாசிக்கிறேன், நிச்சயமாக, நானே ஆர்ப்பரிக்கவும் கூக்குரலிடவும் செய்கிறேன். அது சரிதான். ஒவ்வொரு வரத்தையும் நான் விசுவாசிக்கிறேன்; இல்லாவிட்டால், சுகமளித்தலைக் குறித்து இங்கே பிரசங்கித்துக்கொண்டிருக்க மாட்டேன்.

அந்தக் காரியங்கள் அனைத்தையும் நான் விசுவாசிக்கிறேன்; ஆனால் சகோதரரே, இன்னும் அது இதுவல்ல, அது இதுவல்ல; இந்த வரங்களும் அடையாளங்களும், அது இதுவல்ல; இருதயத்தில் கிறிஸ்து இருப்பதே அது. அதுதான். அப்போது நீங்கள் நிலைத்திருப்பீர்கள், அதுதான் ஜீவன்.

126 இப்போது தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அட்டைகள் கொடுக்கப்படும் [சகோதரர் ஜோசப் மாட்ஸன்-போஸ், "ஆறு மணிக்கு" என்கிறார்.] ஆறு மணிக்கு. இப்போது கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. இன்றிரவு நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனைக்காக ஆயத்தமாகும்படி நான் ஜெபிக்கச் செல்லும் வேளையில், ஆராதனையைப் போதகரிடம் ஒப்படைக்கப் போகிறேன். நாம் சந்திக்கும்வரை தேவன் உங்களோடு இருப்பாராக.

ஜீவனுக்காகத் தாகங்கொள்ளுதல்

Thirsting For Life

57-06-30

Chicago Illinois U.S.A.

1 நாம் ஜெபிப்போம்.

2 எங்கள் பரலோகப் பிதாவே, உமது கரத்தினால் இந்த மகத்தான அடையாளங்களும் அற்புதங்களும் நிகழ்வதைக் காணும்படி, இந்த நாளில் நாங்கள் உயிரோடிருக்க நீர் அனுமதித்திருப்பதால் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இந்தக் காரியங்களை அறிந்திருப்பது உம்முடைய ஊழியக்காரன் அல்ல என்பதை என்னைவிட அதிகமாக உணர்ந்திருக்கிறவர் இங்கே யாருமில்லை; கர்த்தாவே, அது நீர்தான். உம்முடைய வாக்குத்தத்தத்தின்படி, இந்தக் காரியங்களைச் செய்வதாக நீர் வாக்களித்தீர்; நீர் எப்போதும் உம்முடைய வாக்குத்தத்தத்தைக் காத்துக்கொள்கிறீர்; இதற்காக நாங்கள் நன்றியுள்ள வர்களாயிருந்து உமக்குத் துதி செலுத்துகிறோம். இன்று பிற்பகலில் வார்த்தையிலும், இன்றிரவு நடைபெறும் மகத்தான சுகமளிக்கும் ஆராதனையிலும் எங்களை ஆசீர்வதியும்; நாங்கள் உம்மைத் துதிப்போம். கிறிஸ்துவின் நாமத்தில். ஆமென்.

3 நீங்கள் உட்காரலாம். சில நிமிடங்களுக்கு முன்பு நான் யோசித்துக்கொண்டிருந்தேன்... [ஒரு சகோதரர் ஒலிவாங்கியைச் சரிசெய்கிறார்] (அதை உங்களால் முடிந்தவரை உயரமாக வைத்தால். நான்...) யாருக்காவது எப்போதாவது காய்ச்சல் வந்திருக்கிறதா? என் சிறு பையன் ஜோசப்பைக் கொஞ்சிக்கொண்டிருந்தபோது, அவனுக்கிருந்த கடுமையான சளி எனக்கும் பிடித்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்;

எனக்குத் தொண்டை மிகவும் மோசமாக இருக்கிறது, எனக்குப் பிரசங்கியாரின் தொண்டை இருக்கிறது. இந்த இருபத்தைந்து வருடங்களில் என் தொண்டை தொடர்ந்து சிவந்திருக்காத ஒரு நேரத்தை நான் அறிந்ததில்லை; ஏனென்றால், நான் இரவும் பகலும் பிரசங்கித்து, வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கிறேன்; நாள்தோறும், வாரந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும். பாருங்கள்? அதனால் எனக்குத் தொடர்ந்து இருமல் இருந்துகொண்டே இருக்கிறது. ஆகவே நான்—நான் கொஞ்சம்—கொஞ்சம்... அது ஒருபோதும் வலிப்பதில்லை; எனக்கு எப்போதாவது தொண்டை வலி ஏற்பட்டதாக நான் நினைக்கவில்லை, தொண்டை புண்ணானதே இல்லை; அது அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது, அவ்வளவுதான். பிறகு, நிச்சயமாக, அங்கே சளி பிடித்துவிடுகிறது; அதனால் குரல்வளை வீங்கிவிடுகிறது; ஏற்கெனவே அது உராய்ந்து புண்ணாக இருப்பதால், கிருமி உள்ளே நுழைவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது.

4 நான்... இங்கே ஏதோ ஒன்று... ஓ, ஆம், நான் ஒரு கடிதத்தை வாசித்துக்கொண்டிருந்தேன்; அதை நான் கொண்டுவந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறேன், ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரிந்திருந்தது. ரொசெல்லா, இன்று பிற்பகலில் அவர் இங்கே இருக்கிறாரா? ரொசெல்லா கிரிஃபித்? ஆம். உங்களுக்காக அந்த ஏற்பாட்டைச் செய்வதற்குப் பில்லி உங்களைப் பார்க்க விரும்புகிறார். சற்று முன்புதான் உங்கள் கடிதத்தை வாசித்துக்கொண்டிருந்தேன். ஆகவே அவர்கள்...

5 இந்தப் பெண்மணி உள்ளே வந்தார்; அவர் இங்கே எங்கோ இருக்கிறார், இந்த—இந்த அரங்கத்தில், இங்கேயுள்ள இந்தச் சபையில்; பரிசுத்த ஆவியானவர் அவரிடம், "பெண்ணே, உங்களுக்குப் புற்றுநோய் இருக்கிறது" என்று கூறினார். அவர் மேற்கிலுள்ள ஏதோ ஓரிடத்திலிருந்து இங்கே வந்திருந்தார்.

6 அவர், "நான் மேடையைவிட்டு இறங்கிச் சென்றபோது, சொன்னேன்" என்று கூறினார்; அவர் தன் கணவரிடம், "இப்போது, அது அப்படியிருக்கவே முடியாது" என்று சொன்னார். "சகோதரர் பிரன்ஹாம் அதைச் சொன்னபோது நான் ஒன்றும்

119 இப்போது உங்களிடம் ஏதோ ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் வர விரும்பினால், நேராக முன்வாருங்கள். நீங்கள் இந்தக் கூட்டங்களில் இருந்திருக்கிறீர்கள்; இப்போது சந்தேக உணர்வு அனைத்தையும் உங்களிடமிருந்து அகற்றிவிடுங்கள். இப்போது இங்கே பலிபீடத்தில் நீங்கள் இருக்க விரும்புகிறேன்; எந்த உணர்ச்சியையும் சார்ந்திருக்க வேண்டாம்; எந்த உணர்ச்சியும் வேண்டாம்; தேவன் சரியாக என்ன கூறியிருக்கிறார் என்பதை மட்டுமே நீங்கள் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

120 இப்போது கேளுங்கள், "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்று லூத்தரன் கூறினார் என்பது எனக்குத் தெரியும். சரி. அவர்களில் அநேகர் புறப்பட்டுச் சென்றார்கள்; ஆனால் அவர்கள் நீதிமான்களாக இருக்கவில்லை.

121 மெதடிஸ்டுகள், "சகோதரரே, நீங்கள் ஆர்ப்பரிக்கும்போது, அதைப் பெற்றுக்கொண்டீர்கள்" என்றார்கள். அவர்களில் அநேகர் ஆர்ப்பரித்தார்கள், ஆனாலும் அதைப் பெற்றிருக்கவில்லை.

122 பெந்தெகொஸ்தேகாரர்கள், "நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசும்போது, அதைப் பெற்றுக்கொண்டீர்கள்" என்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் அந்நிய பாஷைகளில் பேசுகிறார்கள், ஆனாலும் அதைப் பெற்றிருக்கவில்லை; அவர்கள் அதைப் பெற்றிருக்கவில்லை என்பதை அவர்களுடைய வாழ்க்கையே நிரூபிக்கிறது.

123 இயேசு, "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என்றார். கனிகள் என்றால் என்ன, எதனுடைய கனிகள்? சபையினுடையதா? [ஒலிநாடாவில் வெற்றிடம்]

124 ...உங்கள் இருதயத்தில் உண்மையிலேயே ஓர் இனிமையான உணர்வு, நீங்கள் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட் பட்டிருக்கிறீர்கள் என்பதையும், தேவனோடு சமாதானமாக இருக்கிறீர்கள் என்பதையும் அறிந்திருப்பது, தேவனுடைய காரியங்களை உணவாகக் கொள்ளும் உண்மையிலேயே மென்மையான இருதயம், இவை எல்லாவற்றையும்

ஓ, இன்று தேவன் உன்னை அழைத்துக்கொண்டால் என்ன செய்வாய்?

அப்போது உன் ஆத்துமாவுக்கு ஈடாக என்ன கொடுப்பாய்?

இப்போது கவனமாகக் கேளுங்கள்; பலிபீடத்தைச் சுற்றி இல்லாத நீங்கள் ஒவ்வொருவரும், இப்போது ஆராய்ந்து பாருங்கள்:

பின்னர் நீ நியாயத்தீர்ப்புப் பீடத்தில் நிற்கும்போது,

மேலே தேவனுடைய தராசில் நீ நிறுக்கப்படும்போது,

என்றென்றும் மரிக்கும்படி உனக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டால்,

அப்போது உன் ஆத்துமாவுக்கு ஈடாக என்ன கொடுப்பாய்?

116 அதைச் சிந்தித்துப் பாருங்கள். இங்கேயுள்ள ஒவ்வொருவருக்கும், அந்த நிறுத்தல் அடுத்த அரைமணி நேரத்தில் இருக்கலாம். இது உங்கள் கடைசி வாய்ப்பு அல்ல என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் உண்மையாகவே அதை விரும்பாவிட்டால் வராதீர்கள். ஆனால் உங்கள் இருதயத்தில் மிகச் சிறிதளவாவது தாகம் இருந்தால்... [ஒலிநாடாவில் பதிவு இல்லாத இடம்—பதிப்பாசிரியர்.] "'மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.' ஓ கர்த்தாவே, நான் உம்மைப் பெற்றாக வேண்டும்; இல்லாவிட்டால் இறந்துவிட வேண்டும்."

117 இன்று பிற்பகலில் இங்கே பலிபீடத்தைச் சுற்றிக் கூடிவருபவர்களைப் பார்க்கிறீர்களா? ஒருவேளை மெதடிஸ்டுகள், பாப்டிஸ்டுகள், பிரஸ்பிட்டேரியன்கள், லூத்தரன்கள், பெந்தெகொஸ்தேயினர், சிலர் எந்தச் சபையையும் சேராதவர்கள்; ஆனால் அங்கே ஒரு தாகம் இருக்கிறது; அவர்கள் வாஞ்சிக்கிறார்கள்.

118 நான் இன்னும் ஒரு கணம் காத்திருக்கப்போகிறேன்; இன்னும் சில நிமிடங்களே இருக்கின்றன. ஒரு மணி நேரம்தான் ஆகியிருக்கிறது; ஒரு மணி நேரம் எடுத்துக்கொள்வதாக வாக்களித்தேன்; இன்னும் ஒரு சிறிய நிமிடம் மட்டும்.

சொல்லவில்லை" என்றார்; "ஆனால் நான்—நான், 'இப்போது, ஒரு நிமிடம் பொறுங்கள், எனக்குத் தெரியும்...' என்று நினைத்தேன்" என்றார். பிறகு, அவர் யார், எங்கிருந்து வந்தார், அவருக்கு என்னென்ன அறிகுறிகள் இருந்தன, எல்லாவற்றையும் நான் அவரிடம் கூறியதாகச் சொன்னார்; மருத்துவரால் அவருடைய பிரச்சினையைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், ஆனால், "உங்களுக்குப் புற்றுநோய் இருக்கிறது" என்று நான் கூறியதாகவும் சொன்னார். அவர் அதைச் சந்தேகித்தார்.

7 இப்போது, அந்தக் கடிதங்கள் என்னிடம் இருக்கின்றன; இன்றிரவு அவற்றைக் கொண்டுவருகிறேன்; இன்றிரவு அதற்கு நல்ல நேரமாக இருக்கும். இப்போது அவர் புற்றுநோயால் மரணத்தின் விளிம்பில் மருத்துவமனையில் இருக்கிறார். பாருங்கள்? அது அங்கே இருந்தது; மருத்துவரால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை; ஆனால் அது அங்கே இருந்ததைப் பரிசுத்த ஆவியானவர் அறிந்திருந்தார்.

8 இப்போது, இப்போது, நான் இதைச் சொல்லவில்லை, பாருங்கள்; ஆனால் ஒருவேளை அவர் அதைச் சந்தேகிக்காமல் இருந்திருந்தால், இன்றைக்கு நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கலாம், பாருங்கள், பாருங்கள், அவர் அதைச் சந்தேகிக்காமல் இருந்திருந்தால். நீங்கள் விசுவாசிக்க வேண்டும்; என்னை அல்ல, நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டியதில்லை, நான் ஒரு மனிதன் மட்டுமே; ஆனால் அவர் எதையாவது சொல்லும்போது, அது சத்தியம், பாருங்கள், அது சத்தியம்.

9 ஆகவே, ஒருமுறை ஒரு கூட்டத்தில், அது கனடாவில் நடந்தது, இங்கே வெகுதூரம் வடக்கே, டெட்ராய்ட்டுக்கு எதிரே இருக்கும் அந்த நகரத்தின் பெயர் எனக்கு எப்போதும் நினைவுக்கு வருவதில்லை, [சகோதரர் ஜோசப் மாட்சன்-போஸ், "வின்ட்சர்" என்கிறார்] ஒன்டாரியோவிலுள்ள வின்ட்சர்; அங்கே ஒரு—ஒரு மனிதர் கூட்டத்திற்குள் நுழைந்தார்; அது மனத்தொடர்பு என்று அவர் நினைத்தார். அவர் தன்னுடைய ஜெப அட்டையின் பின்புறத்தில், "எனக்கு இத்தனை வியாதிகள் இருக்கின்றன" என்றும், அதுபோன்ற காரியங்களையும் எழுதினார்; அவருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர் மேடைக்கு வந்தபோது,

அவர் அந்த வரிசையின் ஒரு பகுதியில் இருந்தார்; நான் வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்துக்கொண்டே சென்று கொண்டிருந்தேன். அவர், "எனக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்று உங்களால் சொல்ல முடியுமா?" என்று கேட்டார். சகோதரர் பாக்ஸ்டர் அவரை அடுத்ததாக அனுப்பத் தொடங்கினார்.

நான், "ஒரு நிமிடம்" என்றேன்.

அவர், "இல்லை, எனக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்" என்றார்.

சகோதரர் பாக்ஸ்டர், "இப்போது நாங்கள் அதைச் செய்வதில்லை" என்றார்.

10 இப்போது, அவர் சகோதரர் பாக்ஸ்டர் சொன்னதைக் கேட்டு, பாருங்கள், தொடர்ந்து சென்றிருந்தால், அவருக்கு நல்லதாக இருந்திருக்கும்; ஆனால், இல்லை, அவர் நின்றே ஆக வேண்டியிருந்தது. அவர் அப்படி நின்றபோது, பரிசுத்த ஆவியானவர் அவரிடம், "உங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை; உங்களுக்கு எந்த வியாதியுமே இல்லை" என்று கூறினார்.

அவர், "ஓ, ஆம், எனக்கு இருக்கிறது!" என்றார். "அவர்கள் வைத்திருக்கும் என் அட்டையை அங்கே பாருங்கள்" என்றார்.

நான், "உங்கள் அட்டையில் நீங்கள் என்ன எழுதியிருக்கிறீர்கள் என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை; உங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை" என்றேன்.

அவர், "ஓ, ஆம்!" என்றார்.

நான், "சரி, நீங்கள்..." என்றேன்.

அவர், "எனக்கு அது இருக்கிறது" என்றார். "எனக்கு—எனக்கு அது இருப்பதாக என் அட்டையில் குறிப்பிட்டிருக்கிறேன்" என்றார்.

நான், "உங்கள் அட்டையைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது; நான் அதை ஒருபோதும் பார்ப்பதில்லை. நீங்கள் ஒரு அட்டையை வாங்குகிறீர்கள், நீங்கள்... அதில் எதை எழுத விரும்பினாலும்

113 அந்த வாஞ்சை உங்களுக்குள் வைக்கப்பட்டதற்கு ஒன்றே ஒரு காரணம்தான் இருக்கிறது; அது இங்கேயே இருக்கிறது. நீங்கள் இருக்க வாஞ்சிக்கிற இடம் இதுதான். நீங்கள் அதைக் காணாதபடி செய்யப் பிசாசு முயன்றுகொண்டிருக்கிறான்; ஆனால் நான் இங்கே நின்றுகொண்டிருக்கும்போது, என் இருதயத்தில், "தேவனே, அவர்களுடைய புரிதலின் கண்களைத் திறந்தருளும்" என்று ஜெபித்துக்கொண்டிருக்கிறேன். நான் உங்களை நேசிக்கிறேன்.

114 சகோதரர் ஜோசப் போஸ் பலமுறை என்னிடம், "சகோதரர் பிரன்ஹாம் அவர்களே, சிகாகோ உங்களை நேசிக்கிறது" என்று கூறியிருக்கிறார். நானும் சிகாகோவை நேசிக்கிறேன். ஆனால் கேளுங்கள், ஓர் உண்மையான தகப்பன் தன் பிள்ளைகளிடம் நேர்மையாக இருப்பான். சில நேரங்களில் அவர்களை அவன் அடிக்க வேண்டியிருந்தால், அவன்—அவன் ஓர் உண்மையான தகப்பன்;

ஆம், ஐயா, ஓர் உண்மையான தகப்பன் தன் பிள்ளைகளைத் திருத்துவான். நண்பர்களே, நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், உங்கள் இருதயத்தில் தேவனுக்கான அந்த ஆழமான வாஞ்சையும் அன்பும் இல்லாமல் பரலோகத்திற்குச் செல்ல ஒருபோதும் முயலாதீர்கள். ஆரம்பத்தில் நான் பேசிய அந்த மகத்தான ஊற்றை, தேவன் பெருக்கெடுத்துப் புறப்படும் அந்த ஊற்றை, நீங்கள் அறிந்துகொள்ளாமல் இருந்தால்... இப்போது, அது புறப்படும்போது, அவன் அதைத் திரிபுபடுத்துகிறான், பாருங்கள்; சாத்தான் அதைத் திரிபுபடுத்தி, "ஓ, சரி, இது, இது, இது" என்று சொல்கிறான். கவனமாக இருங்கள்; அது உண்மையானதாக இருக்க வேண்டும்.

115 இப்படிப்பட்ட அந்தச் சிறிய பாடலை நீங்கள் எப்போதாவது கேட்டிருக்கிறீர்களா? சகோதரியே, உங்கள் பாடலைத் தொடருங்கள்; அது சரிதான்.

சகோதரனே, இன்று இரட்சகரைவிட்டுப் பிரிந்திருந்து,

அழிந்துபோகும் காரியங்களில் உன் ஆத்துமாவைப் பணயம் வைக்கிறாய்;

அனைத்தும் உங்களுக்குச் செத்தவையாக இருக்கவும் இல்லாவிட்டால், பலிபீடத்தில் உங்கள் இடத்தை எடுத்துக்கொள்வது நல்லது.

109 நாம் இன்னும் ஒரு கணம் காத்திருக்கும்போது, இப்போது "ஓர் ஊற்று இருக்கிறது" என்ற பாடலை, தயவுசெய்து, மிகவும் மெதுவாக இசையுங்கள்; எல்லாரும் நடந்து வந்து கொண்டிருக்கும்போது.

ஓர் ஊற்று இருக்கிறது... (இப்போது மென்மையாக.)

இம்மானுவேலின் இரத்த நாளங்களிலிருந்து எடுக்கப்பட்டது,

அதன்கீழ் மூழ்கும் பாவிகள்...

110 நீங்கள், "சகோதரர் பிரன்ஹாம் அவர்களே, நான் ஒரு கிறிஸ்தவன்" என்று சொல்கிறீர்கள்.

111 உங்கள் ஆத்துமா உங்களைக் குற்றப்படுத்தினால், இங்கே வந்து அவரை அறிக்கையிடுங்கள். தேவனுடைய தராசில் நீங்கள் நிறுக்கப்படும்போது அதைச் செய்வதைவிட, இங்கே அதைச் செய்வது நல்லது.

தங்கள் குற்றங்கள் அனைத்தையும் இழந்துவிடுகிறார்கள்...

தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக, மாலுமிப் பையனே. வா.

தங்கள் குற்றங்கள் அனைத்தையும் இழந்துவிடுகிறார்கள்...

தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருங்கள்; பரிசுத்த ஆவியானவர் பேசிக்கொண்டிருக்கிறார்; உங்களுக்குள்ள அந்தச் சிறிய இருதயம் அசைந்துகொண்டிருக்கிறது.

...அந்தப் பெருக்கின்கீழ் மூழ்கும் பாவிகள்,

அது சரி; உடனே எழுந்து வாருங்கள்.

112 "சகோதரனே, பிரசங்கியாரே, நான் ஏதோ ஒன்றுக்காக வாஞ்சித்திருக்கிறேன்; அது என்னவென்று எனக்குத் தெரியவில்லை" என்று சொல்லுங்கள்.

எழுதுகிறீர்கள்; ஆனால் நான் அதை ஒருபோதும் பார்ப்பதில்லை; ஊழியக்காரர்கள்தான் அவற்றைப் பெற்றுக்கொள்கிறார்கள்" என்றேன். அவர் சொன்னார், ஆனால் அவர் சொன்னார்... நான், "ஒருவேளை உங்களுக்கு அது இருந்திருக்கலாம்; ஒருவேளை நீங்கள் விசுவாசம் வைத்து சுகமடைந்திருக்கலாம்" என்றேன்.

"ஓ," அவர், "அப்படித்தான் நடந்ததா?" என்று சொல்லித் திரும்பினார்.

11 அப்போதுதான் நான் பார்த்தேன்; ஒரு தரிசனம் இருந்தது. நான், "இப்படிச் செய்யும்படி பிசாசு ஏன் உங்கள் இருதயத்தில் வைத்தான்?" என்றேன். "நீங்கள்..." என்றேன். இப்போது, அந்தச் சபையைச் சேர்ந்த ஒருவர் இந்தக் கட்டிடத்தில் இருந்தால், நான் உங்கள் சபைக்கு எதிராகப் பேசவில்லை. நான், "நீங்கள் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்த ஓர் ஊழியக்காரர்" என்றேன். அவர்கள் வாதிட விரும்புகிறார்கள். நான், "நீங்கள் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்த ஒரு பிரசங்கியார். நேற்றிரவு சாம்பல் நிறச் சூட்டும் சிவப்பு நிறக் கழுத்துப் பட்டையும் அணிந்திருந்த ஒரு மனிதருடன் நீங்கள் உட்கார்ந்திருந்தீர்கள்; சிறிய பச்சை நிறத் துணி தொங்கிக்கொண்டிருந்த ஒரு மேஜையில் நீங்கள் உட்கார்ந்திருந்தீர்கள்; பொன்னிறத் தலைமுடியுள்ள ஒரு பெண் உங்களுக்கு அருகில் உட்கார்ந்திருந்தார்; இது மனத்தொடர்பு என்று நீங்கள் சொன்னீர்கள். இன்று இந்தக் கூட்டத்திற்கு வந்து, தேவனுடைய ஆவியைத் தடுமாறச் செய்வதற்காக, இதை மனத்தொடர்பாகக் காட்டிவிடலாம் என்று நினைத்து, அதில் அதை எழுதினீர்கள்" என்றேன். "வெளிப்படுத்தப்பட்டவர் நீங்கள்தான்" என்றேன்.

12 அப்போதுதான் அங்கே உட்கார்ந்திருந்த ஒரு மனிதர், "திரு. பிரன்ஹாம் அவர்களே, அவருடன் இருந்தவன் நான்தான்" என்றார். "இங்கே உட்கார்ந்திருப்பவர் என் மனைவி; அவரும் அவருடன் இருந்தார்" என்றார்.

13 நான், "உங்கள் அட்டையில் நீங்கள் எழுதிய காரியங்கள் உங்களுக்கு இருக்கின்றன; புற்றுநோயும் காசநோயும்

இரண்டுமே இருக்கின்றன" என்றேன். அவர் மேடையில் கீழே விழுந்தார்.

14 ஆனால், அவரைப் பற்றி நான் கடைசியாகக் கேள்விப்பட்டது—அதன்பிறகு நான் வேறெதுவும் கேள்விப்படவில்லை—சிலரிடமிருந்து வந்த ஒரு கடிதம் மட்டுமே; அவர் ஆபத்தான நிலையில் இருப்பதாக அதில் இருந்தது. ஆகவே, நாம் சபை விளையாட்டு விளையாடிக்கொண்டிருக்கவில்லை. பாருங்கள்?

15 பரிசுத்த ஆவியானவரின் தவறாமை! மனிதனின் தவறாமை அல்ல; மனிதனுக்குத் தவறாமை கிடையாது; ஆனால் பரிசுத்த ஆவியானவர் முற்றிலும் தவறாதவர். எதிலும் பாசாங்கு செய்யாதீர்கள்; நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அப்படியே இருங்கள். "இப்போது நான் கிறிஸ்துவை என் சுகமளிப்பவராக ஏற்றுக்கொள்கிறேன்" என்று நீங்கள் சொல்லும்போது, அதை உண்மையாகவே சொல்லுங்கள். நீங்கள் அப்படியே மூலையைச் சுற்றிச் சென்று, "சரி, சகோதரர் ராபர்ட்ஸ் வரும்போது அவரை முயற்சித்துப் பார்ப்பேன், அல்லது வேறு யாரையாவது" என்று சொல்லாதீர்கள். ஒருபோதும் அப்படிச் செய்யாதீர்கள்; அது ஆபத்தான காரியம், மிகவும் ஆபத்தானது. நீங்கள்—நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அப்படியே இருங்கள்; நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இல்லாவிட்டால், அப்படி இருப்பதாகச் சொல்லாதீர்கள்.

16 நீங்கள் ஒரு பாவியாக இருந்தால், அதை ஒப்புக்கொள்ளுங்கள்; தேவன் அதை அறிவார். இப்போது, உங்கள்—உங்கள் பாவநிலை, நீங்கள் சபையைச் சேர்ந்திருக்கிறீர்கள் என்பதற்காக மட்டும், அது உங்களுக்குச் சிறிதளவும் உதவாது; நீங்கள் ஓர் அறிக்கையைக் கொண்டிருக்கலாம், ஒரு புத்தகத்தில் உங்கள் பெயர் இருக்கலாம், நீதியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கலாம்; இருந்தாலும் நீங்கள் இன்னும் ஒரு பாவிதான். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்; மனதிலுள்ள ஓர் எண்ணத்தினால் அல்ல, உங்கள் இருதயத்தில் ஏதோ ஒன்று நிகழ்ந்திருப்பதினால். பாருங்கள்? அது அப்படியிருக்க வேண்டும், நண்பர்களே; இதைக் குறித்து பிசாசு உங்கள் கண்களைக் கட்டிவிட ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். அது அறிவுபூர்வமான

வெப்பமாகும் என்பது யாருக்கும் தெரியும், நிச்சயமாக; உண்மையாகவே வெப்பம் இருக்கும் ஏதாவது ஒரு பாலைவனத்திற்குச் சென்று பாருங்கள். நிச்சயமாக.

106 நீங்கள், "சரி, நான் விரும்புகிறேன்..." என்று சொல்கிறீர்கள்.

107 அது சரி. அது நல்லது. மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள்; நடைபாதைகளின் வழியாக வந்துகொண்டிருக்கிறார்கள். இன்று பிற்பகலில் இந்தச் சிறிய கூட்டத்திலுள்ள அநேகர் இங்கே பலிபீடத்தைச் சுற்றிக் கூடிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உண்மையாகவே தாகங்கொண்டிருந்தால், மேலே வாருங்கள். பிசாசால் நீங்கள் கடிக்கப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் உண்மையாகவே தேவனுக்கு ஊழியம் செய்ய விரும்புகிறீர்கள்;

உங்களுக்குள்ள அந்தத் தாகம், அது திருப்தியடைய வேண்டும் என்று விரும்புகிறீர்கள்; அப்படியானால் வாருங்கள்; இதுதான் நேரம். அல்லது, நீங்கள் அவ்வளவாகச் சுட்டெரிக்கப்பட்டு, அவ்வளவு கடினமாகவும் உணர்வற்றவராகவும் ஆகிவிட்டதால், இனி எதுவும் உங்களைத் தொட முடியாத நிலைக்கு வந்துவிட்டீர்களா? அப்படியானால், நீங்கள் இதற்கிடையே கடக்கிறீர்கள்: ஜீவனுக்கும் மரணத்திற்கும் இடையே.

108 இப்போது நினைவில் கொள்ளுங்கள், நான் தேவனுடைய ஓர் ஊழியக்காரனாக இருந்தால், நான் சத்தியத்தைச் சொல்கிறேன் என்று தேவன் கூறுவார். உண்மையாகவே தாங்கள் சரியாக இருப்பதாக விசுவாசிக்கிற மக்கள் இருக்கிறார்கள்; ஆனால் அவர்கள் தவறாக இருக்கிறார்கள்: "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரணவழிகள்."

நீங்கள் தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறக்காதவராக இருந்தால், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும், அந்த நாளின் ஒவ்வொரு நிமிடமும் நேசிப்பதே உங்கள் முழு விருப்பமாக இல்லாவிட்டால்; நீங்கள் விழித்திருக்கும்போதும் படுக்கையில் இருக்கும்போதும் அவரைத் துதித்துக் கொண்டிருக்கவும், உங்கள் அன்பு அவருக்காக இருக்கவும், உலகத்தின் காரியங்களும் இந்த நவீனக் காரியங்கள்

பிசாசு வாழ்க்கையைத் திரிபுபடுத்தியிருக்கிறான்; சபையின் செயல்பாட்டைத் திரிபுபடுத்தியிருக்கிறான்; மக்களையே திரிபுபடுத்தும் அளவுக்கு அதைத் திரிபுபடுத்தியிருக்கிறான். உண்மையான சத்தியத்தை மக்கள் காணும்படி செய்வது உலகத்திலேயே மிகவும் கடினமான காரியம். அது சரி. ஓ, அவர்கள் அதை ஆயிரம் மைல் தூரத்திற்குத் தவறவிடுகிறார்கள்.

104 உண்மையாகவே அவருக்காக வாஞ்சிக்கிறீர்களா? நீங்கள் வாஞ்சித்தால், மீண்டும் உங்கள் கையை உயர்த்துவீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இப்போது தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருங்கள். அவருக்காக வாஞ்சிக்கிறவர்களே, நீங்கள் ஒரு நிமிடம் இங்கே நடந்து வந்து, ஒரு நிமிடம் உங்களோடு ஜெபிக்க என்னை அனுமதிக்க முடியுமா என்று எண்ணுகிறேன்.

உங்கள் இருக்கையிலிருந்து அமைதியாக எழுந்திருப்பீர்களா? நான் போகிறேன்... நான் உங்களை அழைக்கப்போவதில்லை; பரிசுத்த ஆவியானவர் அழைக்கட்டும். உங்கள் இருக்கையிலிருந்து எழுந்திருங்கள்... தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஐயா. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, பெண்மணியே. உங்கள் இருக்கையிலிருந்து எழுந்து இங்கே வாருங்கள்; உங்களோடு ஜெபிக்க என்னை அனுமதியுங்கள்; நீங்கள் விரும்பினால், இங்கே பலிபீடத்தின் இந்தப் பக்கத்தில் வரிசையாக நில்லுங்கள்.

105 ஆர்கன் இசைக்கருவி இசைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது, நான் இனி எதுவும் சொல்லப்போவதில்லை; ஒரு கணம் காத்திருக்கப்போகிறேன்; பரிசுத்த ஆவியானவர் அழைக்கட்டும்; நேராக இங்கே வந்து நில்லுங்கள். ஓர் ஊற்று திறந்திருக்கிறது. பழைய காலத்துக் கிறிஸ்தவராக இருக்க விரும்புகிறீர்கள், இல்லையா? உங்கள் ஆத்துமா உண்மையாகவே தேவனுக்காகத் தாகங்கொள்கிறதா?

நீங்கள் சொல்வதுபோல, கொஞ்சம் வெப்பமாக இருந்தாலும், கண்ணியமாக உடையணிந்திருக்க விரும்புவீர்களா? ஆடைகளைக் கழற்றும்போது உங்களுக்கு இன்னும் அதிகமாக

புரிதலினால் வருவதில்லை; அது ஒரு பிறப்பினால் வருகிறது; உங்கள் வாழ்க்கை அதற்குச் சரியாக ஒத்திருக்கிறது; நீங்கள் அதைப் பெற்றிருக்க வேண்டும்.

17 நான் வாசித்து, உங்கள் நேரத்தில் இருபது அல்லது முப்பது நிமிடங்கள் மட்டுமே எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். என் குரல் கரகரப்பாக இருக்கிறது. ஆனால், கர்த்தர் அருளினால், இன்றிரவு வியாதியஸ்தர்களுக்காக ஜெபிப்பதற்கு ஓர் சுவிசேஷ ஆராதனை நடத்த விரும்புகிறேன்.

18 இப்போது, இன்று பிற்பகலுக்கான பொருளாகச் சங்கீதம் 63-இல் காணப்படும் முதல் மூன்று வசனங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்:

“தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என்— என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது.”

“இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப் பார்த்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் காண ஆசையாயிருக்கிறேன்.”

“ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும்.”

19 இன்று பிற்பகலில், தேவனுடைய பரிசுத்த வார்த்தையின் வாசிப்பிலிருந்து மிகவும் வழக்கத்திற்கு மாறான ஒரு வேதபாகத்தை நாம் கொண்டிருக்கிறோம். நான் இதை வாசித்தபோது, அது என்னை அப்படியே திருப்பிவிட்டது; எனக்குள்ளே, “‘ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை எனக்கு நல்லது’ என்று தீர்க்கதரிசி சொன்னபோது, அவர் எதைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்? ஜீவனைவிட நல்லது எதுவுமில்லை. பிறகு, ‘ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும்’” என்று சொல்லிக்கொள்ள நினைத்தேன். சரி, “வெவ்வேறு வகையான ஜீவன்கள் இருக்க வேண்டும்” என்று நினைத்தேன்.

20 இப்போது, அநேகர் ஜீவன் என்ற பொருளைக் குறித்துச் சிந்திக்கத் தொடங்குகிறார்கள். இப்போது, சுதந்திரமாக உணர்ந்து, காரியங்களை மறைத்து வைக்காமல் இருக்க நான் எப்போதும் முயன்றிருக்கிறேன். என் வாழ்க்கையில், தெரிந்தே, ஒருவருடைய பெயரையோ, ஏதாவது ஒரு தனிநபருடைய பெயரையோ நான் ஒருபோதும் குறிப்பிட்டதில்லை; நான் பாவத்தைக் கடிந்துகொண்டிருக்கிறேன், சரியென்று நான் நினைத்ததைப் பிரசங்கித்திருக்கிறேன்; ஆனால் எந்தச் சகோதரரையும் ஒருபோதும் அவமதித்ததில்லை. அவர் மிகவும் தவறாக இருக்கலாம்; நானும் தவறாக இருக்கலாம்; ஆனால் அவர் தவறாக இருந்தாலும், கிறிஸ்துவில் அவரோடு எனக்குள்ள ஐக்கியத்திலிருந்து அவரை—என் ஐக்கியத்திலிருந்து அவரை விலக்குவதில்லை; நாம் சகோதரர்கள். ஆனால் நேற்றிரவு ஓர் ஊழியக்காரர் சொல்வதைக் கேட்டேன். (எங்கள் அறையில் ஒரு தொலைக்காட்சி இருந்தது; உங்களுக்குத் தெரிந்தபடி, எனக்குத் தொலைக்காட்சியில் அதிக ஆர்வம் இல்லை; அதில் சரியானது இருந்தால், சரி; ஆனால் அதில் சரியானது மிகக் குறைவாகவே இருப்பதால், என் வீட்டில் நான் ஒன்றை வைத்திருக்கவில்லை.) ஆகவே, நேற்றிரவு பிரசங்கித்துக்கொண்டிருந்த ஒரு புகழ்பெற்ற சுவிசேஷகர், "ஒரு மனிதன் பிறக்கும்போது ஒரு ஜீவனைப் பெறுகிறான்; அந்த ஜீவனோடு அவன் என்றென்றும் இருப்பான்" என்று சொன்னார்.

21 "அந்த அளவுக்குத் தகுதியுள்ள ஒரு மனிதர்!" என்று நினைத்தேன். ஆனால், இதைச் சிந்தித்துப் பார்க்க அவர் எப்போதாவது உட்கார்ந்திருக்கிறாரா என்று ஆச்சரியப்பட்டேன்: "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" என்று வேதாகமம் கூறுகிறது. ஆம், ஐயா.

22 ஒரு தொடக்கமுள்ள எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு உண்டு; தொடக்கமில்லாத காரியங்களுக்குத்தான் முடிவும் இல்லை. ஒரே ஒரு நித்திய ஜீவன்தான் இருக்கிறது; அது தேவனில் இருக்கிறது; மற்ற எல்லா ஜீவன்களுக்கும் ஒரு முடிவு உண்டு; ஆனால் தேவனுக்கு முடிவில்லை, ஏனென்றால் அவருக்குத் தொடக்கமில்லை; தேவனுடைய பாகங்களாயிருக்கும் நாம்

சொன்னதை நான் விரும்புகிறேன். நீரோடைகளுக்காகத் தாகங்கொள்ளும் மானைப் போல என் தாகம் உம்மை நோக்கி இருக்கிறது. கர்த்தாவே, எனக்கிருந்த அந்தத் தாகம், என்றாவது ஒருநாள் ஒரு பெரிய நபராக இருக்க எதிர்பார்க்கிறேன்" என்று சொல்லுங்கள். ஓ, நானும் அப்படித்தான் எதிர்பார்க்கிறேன்; ஆனால் அங்கே அந்த எல்லையைக் கடந்த பிறகு. "தேவனுடைய பிள்ளையாக இருக்க எதிர்பார்க்கிறேன்."

101 உண்மையாகவே அப்படியிருக்க விரும்புகிறீர்களா? நீங்கள் விரும்பினால், "தேவனே, அது நான்தான்; 'தேவனே, என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது' என்று சொல்லி இப்போது என் கையை உயர்த்துகிறேன்" என்று கூறி, அவரை நோக்கி உங்கள் கையை உயர்த்துவீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, பெண்மணியே. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, இளம்பெண்ணே.

தேவன் உங்களையும் உங்களையும் ஆசீர்வதிப்பாராக. வேறு யாராவது? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நான் இல்லை... தேவன் உங்களையும், பெண்மணியே, உங்களையும் ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஐயா; பெண்மணியே, உங்களையும். நீங்கள் சபையின் அங்கத்தினர்களாக இருக்கலாம்; அதற்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை; நீங்கள் சபையின் ஓர் அங்கத்தினராக இருந்துகொண்டும், இங்கே தெருவிலுள்ள ஒரு விபசாரியைப் போலவே பாவத்தில் கறைபடிந்தவராக இருக்கலாம்.

102 "சகோதரர் பிரன்ஹாம் அவர்களே, அது கடுமையான பிரசங்கம்" என்று நீங்கள் சொல்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

103 நீங்கள் இரவு நேரத்தில் இங்கே வந்தால், அல்லது வேறு எந்த நேரத்திலாவது வந்து, வாழ்க்கையைக் கவனித்து, கர்த்தராகிய இயேசு வார்த்தையின்படி அப்படியே செய்கிற காரியங்களைக் கண்டால், நிச்சயமாகக் கிறிஸ்து எதைக் குறிக்கிறார் என்பதைப் பற்றிய ஏதோ ஒரு புரிதல் எனக்கு இருக்க வேண்டும். சகோதரனே, இந்த ஒரு காரியம் எனக்குத் தெரியும்:

ஒருவேளை திரும்பிச் சென்று, போதகருக்குப் பணம் கொடுத்து, ஒரு சுவிசேஷகர் நகரத்திற்கு வருவதற்காகக் காத்திருப்பதினால், அதைத் தணிக்க நீங்கள் முயன்றுகொண்டிருக்கிறீர்கள்.

நீங்கள் பின்னால் உட்கார்ந்துகொண்டு, "சரி, அந்தப் பிரசங்கியார் மிகவும் நல்ல மனிதர், நான் உங்களுக்குச் சொல்கிறேன், எனக்கு அவரைக் கொஞ்சம் பிடிக்கும். அவர் சிரிக்கும் விதம் எனக்குக் கொஞ்சம் பிடிக்கும். நான்—நான்—அவர் சொல்லும் சிறிய நகைச்சுவைகள் எனக்குப் பிடிக்கும்" என்று சொல்லலாம். சகோதரனே, அது ஜீவன் அல்ல; அது மரணம். அது மரணம்!

99 ஆனால், நீங்கள் உள்ளே சென்று, வேதாகமம் என்னும் பழைய நிழல் மரத்தின்கீழ் உட்கார்ந்து, கண்ணீரால் நனைந்த கண்களோடு மேலே பார்த்து, "ஆசீர்வதிக்கப்பட்ட இரட்சகரே, அந்த நலமான கரையை நான் அடையும்வரை நீர் என்னை வழிநடத்துவீர்" என்று சொல்லக்கூடிய ஓர் அறைக்காக உண்மையாகவே வாஞ்சிக்கிறீர்களா?

அவரை நேசிக்கவும், அவரைத் துதிக்கவும், அவரை ஆராதிக்கவும் வாஞ்சிக்கிற ஏதோ ஒன்று உங்கள் இருதயத்தில் இருக்கிறதா? உலகத்தின் காரியங்கள் அனைத்தும் உங்களுக்குள் செத்துப்போகின்றன; கிறிஸ்து மட்டுமே வேண்டும், இல்லாவிட்டால் மரணம்: "நான் கிறிஸ்துவைப் பெற்றாக வேண்டும்; இல்லாவிட்டால் அழிந்துபோக வேண்டும்."

100 இப்போது ஒவ்வொரு தலையும் குனிந்திருக்கவும், ஒவ்வொரு கண்ணும் மூடியிருக்கவும், ஒவ்வொருவரும் ஜெபித்துக் கொண்டிருக்கவும் விரும்புகிறேன். நேர்மையாக இருங்கள், உண்மையாக இருங்கள்; நீங்கள் உண்மையாகவே அதை விரும்பினால், தேவனை நோக்கி உங்கள் கையை உயர்த்தி, "கர்த்தராகிய தேவனே, இந்த நாளிலிருந்து, தயவுசெய்து, எனக்குத் தெரியும், நான்—நான்—நான்... நான் செய்கிற இந்தக் காரியங்கள் சரியல்ல;

ஆனால் நான் உம்மை நேசிக்க விரும்புகிறேன்; அந்தப் பிரசங்கியார் இன்று வேதாகமத்தில் உம்மைப் பற்றிச்

தேவனோடு நித்திய ஜீவனைக் கொண்டிருக்கிறோம். ஆனால் வேறு எந்த வகையான ஜீவனைக் கொண்டிருக்கும் எல்லாவற்றுக்கும் ஒரு தொடக்கம் இருந்தது; அதற்கு ஒரு முடிவும் உண்டு; நித்தியமான காரியங்கள் மட்டுமே நிலைத்திருக்கின்றன.

23 இப்போது, "என்றென்றும்" என்ற வார்த்தை, "என்றென்றும், என்றென்றும்" என்று ஓர் இணைப்புச் சொல்லோடு வருகிறது. "என்றென்றும்" என்பது ஒரு காலப்பகுதி. ஆனால் நித்தியத்திற்குத் தொடக்கமோ முடிவோ இல்லை; அது ஒரு முழுமையான வட்டம்; அதில் முடிவே கிடையாது; அது நித்தியம். "என்றென்றும்" என்பது, பாருங்கள், "என்றென்றும், மற்றும்"—இணைப்புச் சொல்—"என்றென்றும்"; இரண்டு காலப்பகுதிகள். ஆனால் நித்தியம் என்பதும் நித்திய ஜீவன் என்பதும் ஒரே பொருளைக் குறிக்கின்றன, பாருங்கள்; அது ஒரே வகையைச் சேர்ந்தது; அதற்குத் தொடக்கமில்லை, முடிவும் இல்லை; அது என்றென்றும் ஒரே மாதிரியாக இருக்கிறது; எப்போதும் அப்படியே இருந்தது, எப்போதும் அப்படியே இருக்கும்.

24 இப்போது, சகோதரர் ஜோசப்பின் சபையில், என் கூடாரத்தில் இருந்ததைப் போலவே நான் சுதந்திரமாக உணர்கிறேன்; கர்த்தரிடமிருந்து என் செய்தியை உங்களுக்குக் கொண்டுவருவதற்கு முன்பு, இங்கே ஒரு சிறிய அடித்தளத்தை அமைக்க, ஒரு கணம் சிறிது வேதாகமப் போதனை செய்ய விரும்புகிறேன். உலகத்தில் ஓர் ஆவி இருக்கிறது; அது உண்மையான, தூய்மையான, கலப்படமற்ற அன்பு; அந்த அன்பு அந்த மகத்தான ஆவியானவரிடமிருந்து வந்தது; அது தேவன். உலகத்தில் தூய்மையான, கலப்படமற்ற நீதியாக இருக்கும் ஓர் ஆவி இருக்கிறது; அந்த ஆவி தேவனிடமிருந்து வந்தது. நீதி, அன்பு, தூய்மை ஆகியவற்றின் எல்லா ஆவிகளும் தேவன்தான்; அதுவே நித்தியமானது, என்றென்றும் நிலைத்திருப்பது, தொடக்கமோ முடிவோ இல்லாதது; அதுவே தேவன்.

25 தேவனிடமிருந்து புறப்பட்ட லோகோஸ்... இப்போது கத்தோலிக்க மக்களை அவமதிப்பதாக எடுத்துக்கொள்ள வேண்டாம்; ஆனால் கத்தோலிக்க சபை, நான்... என் பின்னணி,

என் குடும்பம் கத்தோலிக்கம். இங்கேயுள்ள கத்தோலிக்க மக்களுக்காக, "நமது விசுவாசத்தின் உண்மைகள்" என்ற புத்தகம் என்னிடம் இருக்கிறது; அவர்கள் தேவனுடைய "நித்திய குமாரத்துவம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள்; அந்த வார்த்தை எனக்கு அர்த்தமுள்ளதாகவே தோன்றவில்லை. "நித்தியம்" என்ற வார்த்தைக்கு, "தொடக்கமோ முடிவோ இல்லாத நித்தியம்" என்று பொருள்; "குமாரன்" என்றால் "ஒரு தொடக்கம் இருந்தது" என்று பொருள். ஆகவே அது எப்படி இருக்க முடியும்... அது நித்திய தேவத்துவமாக இருக்கலாம்; ஆனால் ஒருபோதும் நித்திய குமாரத்துவமாக இருக்க முடியாது. ஒரு குமாரன் என்பவன் ஒருவரால் பெற்றெடுக்கப்பட்டவன்; ஆகவே அதற்கு ஒரு தொடக்கம் இருந்தது.

26 ஆகவே, தேவனுடைய குமாரனாகிய லோகோஸ் புறப்பட்டபோது, தூய்மையின் இந்த மகத்தான ஊற்றுகளாகிய தேவனால் சிருஷ்டிக்கப்பட்டு, அந்த ஆவிகள் புறப்பட்டபோது அது லோகோஸைச் சிருஷ்டித்தது; அது ஒரு சரீரமாக இருந்தது. அது இப்போது நாம் இருக்கும் உருவத்தில் இருந்தது; இறையியல் வழக்கில் அது "தேவத்தோற்றம்" என்று அழைக்கப்படுகிறது. அது தனக்குள் ஆவி இல்லாத ஒரு சரீரம்; கிறிஸ்தவர்களாகிய உங்களுக்காகக் காத்திருக்கும் ஒரு சரீரம். ஜீவன் இதைவிட்டு நீங்கியவுடன், நீங்கள் அந்தச் சரீரத்திற்குள் செல்கிறீர்கள். "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், நமக்காக ஏற்கெனவே ஒன்று காத்திருக்கிறது"; ஒரு தேவத்தோற்றம்.

27 இப்போது, தேவன் தேவத்தோற்றத்தில் இருந்தபோது, அது உருவாகிக்கொண்டிருந்த கிறிஸ்துவாக இருந்தது; பிறகு அந்தத் தேவத்தோற்றம் மாம்சமாகி நம்மிடையே வாசம்பண்ணினது; அது மீட்பதற்காக இருந்தது. இந்தச் சிருஷ்டியை மீட்டு, அதற்கு ஜீவனைக் கொடுத்து, அதை மறுபடியும் மேலே நித்தியமானவரிடத்திற்குக் கொண்டுசெல்ல, அவர் அங்கிருந்து இதன் வழியாகக் கீழே வந்தார். பாருங்கள்?

28 இப்போது, ஒரே ஒரு நித்திய ஜீவன்தான் இருக்கிறது; அது தேவனில் மட்டுமே இருக்கிறது; தேவன் மட்டுமே நித்திய

மகிமையை, வியாதியஸ்தர்களைச் சுகமாக்கும் உமது வல்லமையை, மகிமைப்படுத்துவதைக் காண விரும்புகிறேன்;

பழைய காலத்து மார்க்கக் கூட்டங்களோடு, ஒரு மகத்தான ஊற்றைப் போல உமது மகிமை மக்கள்மேல் பொழிவதைக் காண விரும்புகிறேன். உமது பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைக் கண்டதுபோல உம்மைக் காண விரும்புகிறேன். ஏனென்றால் ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை எனக்கு நல்லது"—சிறிய 'எல்' எழுத்து—"என் உதடுகள் உம்மைத் துதிக்கும்."

97 நீங்கள் தாகமுள்ளவர்களா? உண்மையாகவே ஓர் உண்மையான கிறிஸ்தவராக இருக்க விரும்புகிறீர்களா? பழைய காலத்துக் கிறிஸ்தவராக இருக்க நீங்கள் உண்மையாகவே விரும்பினால், அதை விரும்பும்படி செய்கிற ஏதோ ஒன்று உங்களுக்குள் இருக்கிறது. நீங்கள் பரலோகத்திற்குச் செல்ல விரும்புகிறீர்களா? நினைவில் கொள்ளுங்கள், மிருகம் பரலோகத்திற்குச் செல்ல விரும்புவதில்லை;

மிருகத்திற்கு ஆத்துமா இல்லை; மறுமையின் ஜீவன் என்றால் என்ன என்று மிருகத்திற்குத் தெரியாது; ஆனால் மறுமையின் ஜீவன் என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியும்; மறுமையின் ஜீவனுக்காக நீங்கள் வாஞ்சிக்கிறீர்கள்; மிருகத்தால் அப்படி வாஞ்சிக்க முடியாது; அதற்கு ஆத்துமா இல்லை.

ஆனால் நீங்கள் ஓர் ஆத்துமாவோடு உண்டாக்கப்பட்டீர்கள்; ஒரு தீர்மானம் செய்வதற்காக அந்த ஆத்துமா உங்களுக்குக் கொடுக்கப்பட்டது. உங்களுக்குள் இருக்கும் அந்த இருதயம் ஒரு தீர்மானம் செய்கிறது; மிருகத்தால் அந்தத் தீர்மானத்தைச் செய்ய முடியாது; ஏனென்றால் அதைச் செய்வதற்கானது அதற்குள் இல்லை.

98 ஆனால் தேவனுக்காக வாஞ்சிக்கிற ஏதோ ஒன்று உங்களுக்குள் இருக்கிறது; ஒருவேளை வீட்டிலேயே இருந்து, குளிர்சாதன வசதியுள்ள அறைக்குள் சென்று, தொலைக் காட்சியைப் பார்த்து, ஜெபக்கூட்டத்திற்குச் செல்லாமல் வீட்டிலேயே இருந்து, வேதாகமத்தை ஒருபோதும் வாசிக்காமல், ஞாயிற்றுக்கிழமை காலையில் சபைக்குச் சென்று, பிறகு

94 இதற்காக நீங்கள் என்னை வெறுக்கலாம்; ஆனால், சகோதரனே, நியாயத்தீர்ப்பு நாளில் நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லியிருக்கிறேன் என்பதை நீங்கள் காண்பீர்கள். அது முற்றிலும் சரி. இப்போது, சுத்தப்படுத்திக்கொள்ளுங்கள், சீர்படுத்திக்கொள்ளுங்கள்,

மற்றவர்களும் அதையே செய்யக் கற்றுக்கொடுங்கள்; உங்கள் ஆத்துமா தாகங்கொள்ளத் தொடங்கும். "தேவனே, உங்கள் ஆடம்பரங்களையும் உங்கள் புகழையும் பற்றி எனக்குக் கவலையில்லை; எனக்குக் கிறிஸ்து வேண்டும், இல்லாவிட்டால் நான் இறந்துவிடுவேன்." பெந்தெகொஸ்தே சபை அந்த நிலைக்கு வரும்போது, தேவன் அங்கே செயல்படுவார். மக்கள் உலகத்தின் காரியங்களுக்குப் பதிலாக அவருக்காகத் தாகங்கொள்ளத் தொடங்கும்வரை, அவர் அங்கே ஒருபோதும் செயல்படமாட்டார்.

இதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கும்போதே நாம் ஜெபிப்போம்.

95 நீங்கள் குற்றமுள்ளவர்களா? நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்களா? ஒவ்வொருவரும் உங்கள் இருதயத்தில் ஒரு சிறிய ஜெபம் செய்யுங்கள்: "அதில் நான் குற்றமுள்ளவனா?" இன்று தேவனுடைய புத்தகத்தைக் கொண்டு உங்கள் ஆத்துமாவை ஆராய்ந்து பாருங்கள். "எப்படிப்பட்ட வாழ்க்கைக்கு நான் இடமளித்துக்கொண்டிருந்தேன்?"

96 "ஓ கர்த்தாவே, ஓ, என் தேவனே, நீர் என்னுடைய தேவன்; என் இளமையின் ஆரம்பத்திலேயே உம்மைத் தேடுவேன்; என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சம்..." ஓ, என்னே! ஆடைகள் அகற்றப்பட்டவர்களாக இருக்க விரும்புவதில்லை; அவர்கள் இதைச் செய்ய விரும்புவதில்லை; மதுபானத்தாலும் மற்ற காரியங்களாலும் நிரப்பப்பட நீங்கள் விரும்புவதில்லை.

"தண்ணீரற்ற வறண்ட நிலத்திலே என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது; உமது வல்லமையைக் காண..." என்ன? "கர்த்தாவே, உமது வல்லமையைக் காண விரும்புகிறேன்; உமது

ஜீவனைக் கொண்டிருக்கிறார்; தேவனுடைய குமாரர்களாகும் சிலாக்கியம் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பிறகு அந்த வார்த்தை: "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு"; அங்கே பயன்படுத்தப்பட்ட "சோயே" என்ற கிரேக்க வார்த்தை தேவனுடைய சொந்த ஜீவனைக் குறிக்கிறது; அவரை ஏற்றுக்கொள்ளும் சிருஷ்டி தேவனுடைய ஒரு பாகமாகி, தேவன் நித்தியமானவராய் இருப்பதுபோலவே நித்தியமானதாக இருக்கிறது. அது சரி. அதை நாம் சந்தேகிப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை; அது தேவனுடைய என்றென்றும் நிலைத்திருக்கும் நித்திய வார்த்தை. ஒரு தொடக்கமிருந்த எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு உண்டு.

29 ஆகவே என்ன... எங்கே—பாவம் எங்கே தொடங்கியது? பாவம் ஏதேன் தோட்டத்தில் தொடங்கியது; பாவத்திற்கு ஒரு முடிவு உண்டு. ஆகவே தாவீது, "ஓ கர்த்தாவே, என் தேவனே, தண்ணீரற்ற வறண்ட நிலத்தில் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது; ஏனென்றால் ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை எனக்கு நல்லது" என்று கதறியிருந்தால், இரண்டு வெவ்வேறு வகையான ஜீவன்கள் இருக்க வேண்டும். இரண்டு வகையான ஜீவன்கள் இருக்கின்றன. ஒரு மனிதன் இந்த உலகத்தில் பிறக்கும்போது, அவன் பிறக்கையில் பாவத்தின் விளைவாகவே இருக்கிறான்; ஏனென்றால் அவன் பாலியல் இச்சையினால் வந்தான்; அவன் பாவத்தின் விளைவாகவே இருக்கிறான்; அவன் அப்படிப்பட்டவன் என்று வேதாகமம் கூறுகிறது: "அவன் பாவத்தில் பிறந்து, அக்கிரமத்தில் உருவாகி, பொய் பேசுகிறவனாக உலகத்திற்கு வருகிறான்." இருந்தாலும் அவனுக்கு ஜீவன் இருக்கிறது; ஆனால் அந்த ஜீவன் திரிபுபடுத்தப்பட்ட ஜீவன். அந்த ஜீவன்...

30 சாத்தானால் ஜீவனைச் சிருஷ்டிக்க முடியாது; தேவன் சிருஷ்டித்ததை அவனால் திரிபுபடுத்த மட்டுமே முடியும். சாத்தானால் சிருஷ்டிக்க இயலாது; ஒரே ஒரு சிருஷ்டிகர்தான் இருக்கிறார்; அவர் தேவன். சாத்தானால் சுகமளிக்க முடியாது, மருத்துவத்தால் சுகமளிக்க முடியாது, தேவனைத் தவிர வேறு எதனாலும் சுகமளிக்க முடியாது; ஏனென்றால் அவர் மட்டுமே

சிருஷ்டிகர். மருத்துவமோ, மருந்தோ, உலகத்திலுள்ள வேறு எதுவுமோ ஜீவனைச் சிருஷ்டிக்க முடியாது என்பதை அறிவுள்ள எவரும் அறிந்திருப்பார்கள்; தேவன் மட்டுமே அதற்குரிய ஒரே ஒருவர்; சிருஷ்டிப்பதில் அவர் தனித்து நிற்கிறார்; ஆகவே அவர், "உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிற கர்த்தர் நானே" என்று கூறினார்.

31 இப்போது, வெவ்வேறு வகையான ஜீவன்களை நாம் காண்கிறோம். அதனால்தான் இந்த மனிதன் ஆதாமின் வழிவந்தவனாகப் பிறக்கிறான்; ஆதாம் தன் மனைவிக்குச் செவிகொடுத்ததால் பாவத்தின் விளைவானான்; மனைவியோ சாத்தானிடமிருந்து வந்த பாவங்களின் விளைவானாள். ஆதாம் தன் மனைவியைப் பின்தொடர்ந்து வெளியே சென்றான்; அது கிறிஸ்துவின் ஒரு பரிபூரண முன்னடையாளம்; அவர் தம்முடைய மணவாட்டியின் பாவங்களை ஏற்றுக்கொள்ள அவளுடன் சென்றார். ஆதாம் ஏவாளின் பாவங்களை ஏற்றுக்கொண்டு ஏதேன் தோட்டத்தைவிட்டு வெளியேறியதுபோல, அவன் வஞ்சிக்கப்படாமல், மனப்பூர்வமாக அவளுடன் வெளியே சென்றதுபோல, கிறிஸ்துவும் வஞ்சிக்கப்படவில்லை. சாத்தானால் அவரை வஞ்சிக்க முடியவில்லை: "நீர் தேவனுடைய குமாரனேயானால்." அவர் தாம் யார் என்பதை அறிந்திருந்தார்; ஆனால் அவர் வேண்டுமென்றே வெளியே சென்று, சபைக்காகப் பாவத்தை ஏற்றுக்கொண்டார்; அவரே நம்முடைய பாவத்தைச் சுமக்கிறவர்.

32 இப்போது, நித்திய ஜீவனின் அந்தச் சுழற்சியிலிருந்து வெளிவந்த எல்லாம், மீண்டும் அதன் சுழற்சிக்குள், அந்த முடிவில்லாத நித்தியத்திற்குள் திரும்பிச் செல்லும்போது, பாவத்தின் எந்தச் சாயலும் எந்த வடிவமும் எந்த விதத்திலும் ஒருபோதும் உள்ளே நுழையாது. இப்போது, பரிசுத்தத்தை விசுவாசிக்கிற ஒரு பாப்டிஸ்ட் பிரசங்கியார் இங்கே இருக்கிறார். கவனியுங்கள், அது சுத்திகரிக்கப்பட வேண்டும்; அந்த நபர் சுத்திகரிக்கப்பட வேண்டும்; அவரைச் சுத்திகரிக்கக்கூடியது ஒன்றே ஒன்றுதான்; அது இயேசு கிறிஸ்துவின் இரத்தம்; வேறு எதனாலும் அதைச் செய்ய முடியாது.

90 உங்கள் தாயார் அணிந்துவந்த பாவாடை அவரை முழுவதுமாக மூடியிருந்தது; ஒருவேளை அதற்காக அவர் மூன்று டாலர்களோ, ஒன்றரை டாலரோ கொடுத்திருப்பார்; ஆனால் நீங்கள் நகர மையத்திற்குச் சென்று, ஒரு சிறிய, அருவருப்பான ஆடைக்கு முப்பத்தைந்து டாலர்கள் கொடுக்கிறீர்கள்; பிசாசு உங்களை அதற்குள் ஊற்றிவிட்டிருக்கிறான்; நீங்கள் இங்கே வெளியே வந்து, நியாயத்தீர்ப்பு நாளில் விபசாரத்திற்காகப் பதில் சொல்லும்படி செய்கிறான்.

91 "கவனமாக இருங்கள், பிரசங்கியாரே," என்று நீங்கள் சொல்கிறீர்கள், "நான் ஒருபோதும் விபசாரம் செய்ததில்லை."

92 அதைப் பற்றி எனக்குத் தெரியாது. "ஒரு ஸ்திரீயை இச்சையோடுபார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று" என்று வேதாகமம் கூறுகிறது. நீங்கள் எவ்வளவு ஒழுக்கமாக வாழ்கிறீர்கள், எவ்வளவு தூய்மையாக வாழ்கிறீர்கள், உங்கள் கணவருக்கு எவ்வளவு மரியாதைக்குரியவராக வாழ்கிறீர்கள் என்பது ஒரு பொருட்டல்ல; ஒரு மனிதன் உங்களை அப்படிப் பார்க்கும்படி நீங்கள் உடையணிந்தால், நியாயத்தீர்ப்புப் பீடத்தில் அந்தப் பாவி விபசாரத்திற்காகப் பதில் சொல்லும்போது, அதைச் செய்தவர் நீங்களாக இருப்பீர்கள். அது சரி. இப்போது, என் அன்பான நண்பரே, அதை உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள்; சிறிது நேரம் அதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.

93 "எவனும்," என்று இயேசு கிறிஸ்து கூறினார், "ஒரு ஸ்திரீயை இச்சையோடுபார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று." அவன் விபசாரம் செய்வதற்கு முன்பு, அந்தப் பெண் தன்னை அந்த விதமாகக் காட்டியிருக்க வேண்டும்; கவர்ச்சியாகத் தோன்றும்படி தன்னைத் தெருவில் வெளிப்படுத்தியிருக்கிறாள். ஒழுக்கத்தில் அவள் எவ்வளவு தூய்மையாக இருந்தாலும், தேவனுடைய புத்தகத்தில் அவள் விபசாரியாக இருக்கிறாள். அதுதான் உங்கள் ஹாலிவுட்; அதுதான் உங்கள் பிசாசு.

திருப்தியாக்குவேன். நீங்கள் திருப்தியடைவீர்கள்" என்று கூறிக்கொண்டிருக்கிறார்.

87 "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது."

88 முடிவாக இதைக் கூறுகிறேன்: பெந்தெகொஸ்தே சபைக்கும், மெதடிஸ்ட், பாப்டிஸ்ட், பிரஸ்பிட்டேரியன், மற்ற எல்லாச் சபைகளுக்கும் உள்ள பிரச்சினை, அவற்றின் சபையார்தான். அந்தச் சபையார் உண்மையாகவே தேவனுக்காகத் தாகங்கொண்டிருந்தால், அந்தச் சிறிய பழைய பிரசங்கியாரை அங்கிருந்து வெளியே அனுப்பிவிட்டு, அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஒருவரை அங்கே கொண்டுவருவார்கள். அது சரி.

89 இன்றைக்கு நீங்கள் நகரத்திற்குச் செல்ல முடியாது; இந்த மாநாட்டிலுள்ள வியாபாரிகளே, தொழிலதிபர்களே... காலணி வியாபாரிகளே, பெண்கள் முன்பு அணிந்துவந்த பழைய பாணியிலான பொத்தான் வைத்த காலணியை நீங்கள் வைத்தால் என்ன ஆகும்? அதை வாங்கியபோது, அதனுடன் ஒரு காலணிக் கொக்கியும் கிடைத்தது. இன்று சிகாகோவில் அந்தக் காலணியை விற்க முயன்றால் என்ன ஆகும்?

உங்களுக்கு வியாபாரம் நடக்கும் என்று நினைக்கிறீர்களா? இல்லை, ஐயா. பெண்களுக்காகச் செய்கிற இந்தச் சிறிய பழைய உயரமான காலணிகளைவிட, அதில் ஐந்து மடங்கு தோல் இருக்கிறது; இவற்றில் இப்படிப்பட்ட ஒரு சிறிய குச்சி இருக்கிறது; அவர்களுடைய கால்விரல்கள் கீழே சாய்ந்திருக்கின்றன; குதிகால்கள் மேலே உயர்ந்திருக்கின்றன.

சுமார் நாற்பது சென்ட் மதிப்புள்ள தோலுக்கு அவர்களிடம் இருபத்தைந்து, முப்பத்தைந்து டாலர்கள் வசூலிக்கிறார்கள்; அதை வாங்கும் அளவுக்கு அவர்கள் முட்டாள்களாக இருக்கிறார்கள். ஆனால் அது ஏன்? அந்த வியாபாரி ஏன்...? அவர் அவர்களிடம் உண்மையைச் சொன்னால், அவர்கள் அதை விரும்புவதில்லை. அது முற்றிலும் சரி.

33 ஆகவே, "தேவனே, என் தேவனே, ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை எனக்கு நல்லது" என்று அவர் கதறியபோது, அப்படியானால் இரண்டு வெவ்வேறு வகையான ஜீவன்கள் இருக்க வேண்டும் என்று நான் ஆச்சரியப்பட்டேன். அதை ஆராயத் தொடங்கினேன்: இரண்டு வெவ்வேறு வகையான ஜீவன்கள் எப்படி இருக்க முடியும்? சரி, அநேகர் இங்கே தெருக்களிலும் பல இடங்களிலும் சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் போது, தாங்கள் "வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்" என்று நினைப்பதைப் பற்றி நான் சிந்திக்கத் தொடங்கினேன். அதுதான் காரியம்.

34 இளம் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை அழைத்துச் சென்று, அவர்களுக்குக் கால்களைத் தட்டி ஆடும் நடனத்தைக் கற்றுக்கொடுப்பதை நான் கவனித்திருக்கிறேன்: "சரி, அவள் கொஞ்சம் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்."

35 சட்டம் அனுமதிக்கும் அளவுக்கான ஆடைகளை மட்டுமே அணிந்துகொள்ளும்படி, இளம்பெண்கள் தங்கள் ஆடைகளைக் குறைத்துக்கொண்டு வெளியே செல்வதை நான் பார்த்திருக்கிறேன்; அவள், "நான் உண்மையாகவே வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டிருக்கிறேன்!" என்று சொல்கிறாள். அவள் உயிரோடிருக்கும்போதே செத்தவளாயிருக்கிறாள் என்பதை அந்தப் பெண் அறியவில்லை.

36 சில காலத்திற்கு முன்பு, வேறொரு நகரத்தில், நான் என் அறைக்குச் சென்றுகொண்டிருந்தேன்; அந்த நகரத்தில் கிவானிஸ் சங்கமோ, அல்லது ஏதோ ஒரு சங்கமோ கூட்டம் நடத்திக்கொண்டிருந்தது; ஒரு பேரணியும் ஒரு மாநாடும் நடத்திக்கொண்டிருந்தது. நான் உள்ளே சென்று, மின்தூக்கியில் மேலே சென்றபோது, இரண்டு இளம்பெண்கள் தங்கள் உள்ளாடைகளை மட்டும் அணிந்துகொண்டு, கையில் ஒரு விஸ்கி பாட்டிலுடன் கீழே வந்துகொண்டிருந்தார்கள்; "ஹூப்பீ!" என்று கூச்சலிட்டுக்கொண்டே சென்றார்கள்; ஆண்கள் அவர்களை ஓர் அறையிலிருந்து மற்றோர் அறைக்கு இழுத்துக்கொண்டிருந்தார்கள். நான் பின்புறம் நிழலில்

உட்கார்ந்து கவனித்தேன்; அவர்கள் எனக்கு அருகில் வந்தபோது, ஓ, எவ்வளவு அருவருப்பாக இருந்தது! அவர்கள் இருவரும் பெண்கள்; சந்தேகமில்லாமல் திருமணமான பெண்களாக இருந்திருப்பார்கள்; அவர்களுடைய கணவர்கள் வீட்டில் இருந்திருப்பார்கள்; தாங்கள் "கொஞ்சம் களங்கமில்லாத கேளிக்கையில்" ஈடுபட்டிருப்பதாக அவர்கள் நினைத்தி ருக்கலாம். அப்படிப்பட்ட ஒன்று கிடையவே கிடையாது! அவர்கள் அங்கே மேலே கூச்சலிட்டுக்கொண்டு சுற்றித்திரிந்தார்கள்; அதைச் சற்று ஓய்வெடுத்துக்கொள்வது என்று சொல்வார்கள். அவர்களில் ஒருத்தி நின்று, "ஹூப்பீ! இதுதான் வாழ்க்கை!" என்றாள்.

நான், "ஓ, இல்லை, அது ஜீவன் அல்ல; அது மரணம்! 'சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்' என்று வேதாகமம் கூறுகிறது" என்றேன். வேதாகமம் அப்படிக் கூறுகிறது.

37 இதைத்தான், பல நேரங்களில், பிசாசு உங்களுக்கு ஜீவன் என்று சொல்ல முயல்கிறான்; ஆனால் அது மரணம். மேலும் கவனியுங்கள், அந்த வாழ்க்கை அவ்வளவு துயரமானதாகிவிடுவதால், மக்கள் அந்த உயிரைப் போக்கிக்கொள்கிறார்கள்; துப்பாக்கியை எடுத்து, தங்கள் மூளையைச் சுட்டுச் சிதறடித்துக்கொள்கிறார்கள்; ஒருவேளை இந்தக் கோடைக்காலத்தில் சிகாகோவில் அப்படிப்பட்டவர்கள் அநேகர் இருப்பார்கள்; கோபுரங்களிலிருந்து குதித்து, தண்ணீரில் மூழ்கித் தங்களை மாய்த்துக்கொள்பவர்கள் அநேகர் இருப்பார்கள்; அடுத்த சில வாரங்களில் சிகாகோவில், தங்கள் எரிவாயு அறைகளில் வாயுவைத் திறந்துவிட்டுத் தங்களைக் கொன்றுகொள்பவர்கள் இருப்பார்கள்; வேண்டுமென்றே மோட்டார் வாகனங்களுக்கு முன்னால் வாகனத்தை ஓட்டிச்சென்று தங்களைக் கொன்றுகொள்பவர்கள் சிலர் இருப்பார்கள்; விஷம் குடிப்பவர்கள் சிலர் இருப்பார்கள்; எல்லாப் பக்கங்களிலும் தற்கொலை. அந்த வகையான வாழ்க்கை அவ்வளவு வஞ்சகமானதாகிவிடுகிறது; ஆகவே தீர்க்கதரிசி அந்த வகையான ஜீவனைப் பற்றிப் பேசவில்லை என்பதை நாம்

83 "நீரோடையின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் அதைக் கண்டடைவார்கள்."

84 ஆம், ஒவ்வொரு பாவிக்காகவும், இம்மானுவேலின் இரத்த நாளங்களிலிருந்து எடுக்கப்பட்ட இரத்தத்தால் நிறைந்த ஓர் ஊற்று இருக்கிறது. நீதியுள்ளவர்களாக இருக்கத் தாகங்கொண்டு வாஞ்சிக்கிறவர்களே, இன்று உங்களுக்காக ஓர் ஊற்று திறந்திருக்கிறது. நரகத்தின் வேட்டை நாய்கள் உங்களைக் காயப்படுத்தியிருக்கலாம்;

அவை உங்களை இந்தப் பக்கமோ அந்தப் பக்கமோ கிழித்திருக்கலாம்; அவை உங்களைப் பிளந்து, உங்கள் இரத்தத்தைக் குடித்து, இந்த இடங்களுக்கு உங்களை அனுப்பி, சுகபோக வெறிபிடித்தவர்களாக்கியிருக்கலாம்; நீங்கள் உண்மையாகவே அதிலிருந்து விடுபட விரும்பினால், இன்று ஒரு நீரோடை திறந்திருக்கிறது; அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பு; பரிசுத்த ஆவியானவராகத் தாராளமாகப் பாய்ந்தோடும் அவருடைய ஆவி.

85 "விருப்பமுள்ளவன் வந்து, ஜீவத்தண்ணீரின் ஊற்றிலிருந்து இலவசமாய்க் குடிக்கக்கடவன்."

"விருப்பமுள்ள எவருமா?"

86 ஆம். கறுப்பு, வெள்ளை, பழுப்பு, மஞ்சள், நீங்கள் எப்படிப்பட்டவராக இருந்தாலும், மெதடிஸ்ட், பாப்டிஸ்ட், பிரஸ்பிட்டேரியன், தேவனுடைய சபை, கிறிஸ்துவின் சபை, கத்தோலிக்கர், பெந்தெகொஸ்தே, நீங்கள் யாராக இருந்தாலும், இளைஞர், முதியவர், நடுத்தர வயதினர், ஓர் ஊற்று திறந்திருக்கிறது; ஜீவத்தண்ணீர் தாராளமாகப் பாய்ந்து கொண்டிருக்கிறது;

பரிசுத்த ஆவியானவர், "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நீங்கள் பசிதாகமுள்ளவர்களாயிருக்கும்போது பாக்கியவான்கள்; ஏனென்றால் நான் உங்களைத்

ஏனென்றால் அது அந்தச் சிறிய மானின் பக்கத்திலிருந்து ஒரு முழுத் துண்டை இழுத்துக் கிழித்துவிடும்;

பிறகு இரத்தம் பீறிட்டுக்கொண்டிருக்கும். ஓநாய் இங்கேயுள்ள இரத்த நாளத்தைத் தவறவிட்டு, சற்றுக் கீழே கிழித்திருந்தால், அந்தச் சிறிய மான் ஒருவேளை விரைவாகத் திசைமாற்றக்கூடியதாக இருந்தால், அதனால் நாயிடமிருந்து தப்பிக்க முடியும்; பிறகு அந்த இரத்தத்தை வைத்து அதன் தடத்தைப் பின்தொடர்ந்துகொண்டு, அது மானைத் துரத்தி வருகிறது. அந்தச் சிறிய மான்...

79 நீங்கள் ஒரு மானைக் காயப்படுத்தினால், அது தண்ணீரை அடைய முடிந்தால், அதைத் தடம்பார்த்துப் பின்தொடருவதை விட்டுவிடலாம் என்பதை இங்கேயுள்ள எந்த வேட்டைக்காரரும் அறிவார்; அதற்குத் தண்ணீர் கிடைக்கும்வரை அது உயிரோடிருக்க முடியும்; ஆனால் அதற்குத் தண்ணீர் கிடைக்காதபோது, அது முடிந்துவிடுகிறது.

80 உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? தாவீது அங்கே நின்று அந்தச் சிறிய மானைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்; ஒரு காட்டு நாயால் ஏற்பட்ட காயங்களினால் அது கிழிக்கப்பட்டிருக்கிறது; அது நீரோடைக்காகத் தாகங் கொள்கிறது; அது தண்ணீரைக் கண்டுபிடித்தாக வேண்டும், இல்லாவிட்டால் அழிந்துபோக வேண்டும். அது அந்த நீரோடையை அடையாவிட்டால், அது இறந்துவிடும்; வேட்டை நாய்கள் அதற்குச் சற்றுப் பின்னாலேயே இருக்கின்றன. அது நீரோடையைக் கண்டுபிடித்தாக வேண்டும், அல்லது அழிந்துபோக வேண்டும்.

81 தாவீது, "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது" என்று கூறினார்.

82 "நான் உம்மைப் பெற்றாக வேண்டும்; இல்லாவிட்டால் இறந்துவிடுவேன்; என்னால் தொடர்ந்து செல்ல முடியாது; என் பாதையின் முடிவுக்கு வந்துவிட்டேன். கர்த்தாவே, என்னால் உம்மைக் கண்டடைய முடியாவிட்டால், நான் இறந்துவிடுவேன்."

அறிகிறோம்; அது மரணம்; அது ஜீவனின் வடிவத்திலுள்ள மரணம்.

38 ஹாலிவுட் அமெரிக்காவுக்குச் செய்திருப்பது அதுதான்; அது திரிபுபடுத்தியிருக்கிறது; அது நம்முடைய பெண்களின் ஆடைகளை அகற்றியிருக்கிறது; அது—அது எல்லா வகையான தீய காரியங்களையும் செய்திருக்கிறது; அது நம்முடைய ஆண்களை... ஜீவனின் உண்மையான ஓட்டத்தை மரணமாகத் திரிபுபடுத்திய காரியங்களை அது இங்கே உருவாக்கியிருக்கிறது. நம்முடைய தேசம்கூட செத்துக்கொண்டிருக்கிறது.

39 சில நிமிடங்களுக்கு முன்பு நான் என் மனைவியுடன் பேசிக்கொண்டிருந்தேன்; நாங்கள் ஒரு சிறிய இடத்தில் உட்கார்ந்திருந்தோம்; அங்கே பெண்கள் வந்து கொண்டிருந்தார்கள்; ஒவ்வொருத்தியும் ஒரு சிகரெட்டுடன்; சிலர், அங்கே உட்கார்ந்திருந்த ஒரு சிறு பெண், தன் இமைமுடிகளைப் பிடுங்கிவிட்டு, பிசாசைப் போல ஒப்பனை செய்திருந்தாள்; வெகுதூரம் பின்னால் வரை, பக்கவாட்டில் வளைத்திருந்தாள்; அவள் அங்கே நின்றுகொண்டிருந்தாள்; பாவம், அந்தச் சிறு பெண், சுமார் பதினெட்டு வயதுக்கு மேல் இருக்காது; ஒரு சிகரெட்டைப் புகைத்துக்கொண்டு, தன் வாயை மிகவும் கீழே இழுத்து, "ஃபூ!" என்று மிகவும் அருவருப்பான விதத்தில் செய்து, தன் மூக்கிலிருந்து புகையை வெளியே தள்ளிக்கொண்டிருந்தாள்; அக்கிரமங்களிலும் பாவத்திலும் தான் செத்தவளாயிருப்பதை அவள் உணரவில்லை. "நீ இந்த ஆலயத்தைக் கெடுத்தால், தேவன் அதைக் கெடுப்பார்."

40 இன்றைக்கு என்ன பிரச்சினை என்றால், நித்தியமான, எரிகிற நரகத்தைப் பிரசங்கிக்கவும், அந்தக் காரியங்களைக் குறித்து மக்களை எச்சரிக்கவும் பயப்படுகிற பலவீனமான பிரசங்கப் பீடங்கள் நம்மிடம் அதிகமாக இருக்கின்றன; சபை எவ்வளவு சோம்பலாகவும் ஒழுங்கீனமாகவும் இருக்க முடியுமோ, அவ்வளவு இருக்கும்படி விட்டுவிடுகிறார்கள்.

41 நான், "அன்பே, நாம் எங்கிருந்து தொடங்க முடியும்?" என்றேன். நம்முடைய தேசம் கெட்டுப்போயிருக்கிறது; நம்முடைய அரசியல் எவ்வளவு அழுகிப்போக முடியுமோ அவ்வளவு அழுகிப்போயிருக்கிறது; நம்முடைய தொழிற்சாலைகளும் நம்முடைய பொருளாதாரமும் எவ்வளவு அழுகிப்போக முடியுமோ அவ்வளவு அழுகிப்போயிருக்கின்றன. கார் தொழிலில்கூட, உங்கள் காரிலுள்ள குறைபாடுகளைச் சரிசெய்து முடிக்க உங்களுக்கு ஆறு அல்லது எட்டு மாதங்கள் ஆகின்றன. அது உற்பத்தி வரிசையில், பாகங்களைச் சேர்க்கும் வரிசையில் இருக்கிறது: "எப்படியாவது அதைச் சேர்த்துவிடு. அதனால் என்ன வித்தியாசம் ஏற்படப்போகிறது?"

42 நம்முடைய பெண்மை சிதைந்துபோயிருக்கிறது; அமெரிக்காவின் தாய்மை வீழ்ந்துபோயிருக்கிறது. உலகிலுள்ள எந்தத் தேசத்தையும்விட ஒழுக்கநெறிகள் அதிகமாக அழுகிப்போயிருக்கின்றன. என்ன பிரச்சினை? அவர்கள் தேவனை நேசிப்பதைவிட உலகத்தின் காரியங்களை அதிகமாக நேசித்திருக்கிறார்கள்; அதனால் திரிபுபடுத்தப்பட்ட ஒன்றைப் பெற்றிருக்கிறார்கள். முற்றிலும் சரி.

43 அது மட்டுமல்ல, நம்முடைய சபைகளும் நசுங்கிப்போயிருக்கின்றன. சிறிய பழைய பிரசங்கப் பீடம், அதில் எழுந்து நிற்கிற ஆண்மையற்ற பிரசங்கியார்கள்; குறிப்பிட்ட யாரையும் நான் விமர்சிக்கவில்லை; ஆனால் அவர்கள் எழுந்து நிற்கிறார்கள்; அது ஒரு பிழைப்புக்கான வழி, அது ஒரு காணிக்கை, அல்லது தொலைக்காட்சியிலோ வானொலியிலோ இடம்பெறுவதற்கான ஒரு பிரபலமான பெயர். உலகிலுள்ள எல்லாத் தொலைக்காட்சிகளுக்கும் எல்லாப் புகழுக்கும் ஈடாக, இயேசு கிறிஸ்துவில் எனக்குள்ள என் பிறப்புரிமையை நான் விற்கமாட்டேன்! இல்லை! இந்த அருவருப்பான, தேவபக்தியற்ற காரியங்களைவிட ஜீவன் அதிக மதிப்புள்ளது. உலகத்தின் தலைவராக இருப்பதைவிட, கிறிஸ்துவின் தயவைப் பெற்றிருக்கவே நான் விரும்புகிறேன். உலகம் எப்படிப்பட்ட நிலைக்குள் வந்துவிட்டது!

ஒன்றின் குரலைக் கேட்டால், அது ஒரு வெள்ளாடு கத்துகிறதா அல்லது ஓர் ஆட்டுக்குட்டி கத்துகிறதா என்று உங்களால் சொல்ல முடியாது. பிசாசால் ஓர் ஆட்டுக்குட்டியைப் போலவே கத்த முடியும். அது முற்றிலும் சரி.

75 ஆனால் தாவீது, "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது" என்று கூறினார்.

76 பாலைவனத்தில் இந்தச் சிறிய மான்கள் மகிழ்ச்சியாகத் துள்ளிக்குதித்துச் செல்வதை நீங்கள் காண்கிறீர்கள்; திடீரென்று, ஒரு கூட்டம் காட்டு நாய்கள் அவற்றின் நடுவே ஓடிவந்து அவற்றைப் பிடித்துவிடும். இப்போது, ஓர் ஓநாயோ ஒரு காட்டு நாயோ மானைப் பிடிப்பதற்கு விரும்புகிற இடங்களில் ஒன்று, காதின் அடிப்பகுதிக்குச் சற்றுப் பின்னால்; அங்கே ஒரு பெரிய தமனி மேலே சென்று, கழுத்தின் வழியாகக் கீழே செல்கிறது.

ஓநாயால் தாவி, தன் கோரைப்பற்களை அந்த—அந்த இடத்தில் பதித்து, தொங்க முடிந்தால், பிறகு அந்த ஓநாய் தன் எடையைக் கீழே இழுக்கும்போது, முன்புறமுள்ள அந்த இரண்டு பெரிய இரத்தக் கோரைப்பற்களும் மானின் கழுத்தை அறுத்துவிடுகின்றன; அந்தச் சிறிய மான் ஓரிரு முறை தடுமாறும்; அவ்வளவுதான்; ஓநாய்கள் அதன்மேல் முழுவதுமாகச் சூழ்ந்துவிடும்; சிறிது நேரத்திலேயே அது தின்று தீர்க்கப்படும்.

77 காட்டு நாய்களோ ஓநாயோ மானைப் பிடிப்பதற்கு விரும்புகிற மற்றோர் இடம், அதன் விலாப்பக்கம். அது மானின் விலாப்பக்கத்தைப் பிடித்துக்கொள்ளும்; ஓநாய் தன் எடையைச் செலுத்தி, அந்தச் சிறிய மானின் உடலின் நடுப்பகுதியில் தொங்குவதுபோலக் கீழே இறங்கும்போது, அது மானின் கால்களை நிலைகுலையச் செய்கிறது; பிறகு அது கீழே விழுகிறது; அது மானைப் பிடித்துவிட்டது.

78 சில நேரங்களில், காட்டு நாய் அந்தச் சிறிய மானைப் பிடிக்கும்போது, அந்தச் சிறிய மான் விரைவாகத் திசைமாற்றக்கூடியதாக இருந்தால், அது வேகமாக ஒரு பக்கமாகத் தாவிவிடும்; நாய் தன் பிடியை இழந்துவிடும்;

72 சில காட்டு நாய்கள் யேசபேலைத் தின்றன. ஒரு நாய் மனித மாம்சத்தைத் தின்னாது என்பது உங்களுக்கு எப்போதாவது தெரியுமா? அவை ஒரு மனிதனுடைய இரத்தத்தைக்கூட நக்காது; அவற்றை அதன் அருகில் கொண்டுசெல்ல முடியாது. இல்லை, ஐயா. ஆனால் இது ஒரு குறிப்பிட்ட வகையான நாய்; அது ஒரு காட்டு நாய்; வீட்டு நாய் அல்ல, ஒரு காட்டு நாய். காட்டு நாய்கள் ஓநாய்கள், ஓர் ஓநாயைப் போன்றவை; அவை மனிதர்களைத் தின்னும். ஆனால் நீங்கள் கவனித்தால், இந்தக் காட்டு நாய்கள் வந்து யேசபேலைத் தின்றன; அது ஒரு குறிப்பிட்ட வகையான நாய்.

73 இன்றைக்கும் அப்படித்தான் இருக்கிறது; பிசாசு ஒரு கூட்டம் பழைய காட்டு நாய்களை வெளியே விட்டிருக்கிறான். இளைஞர்களே, அவற்றைப் பெண்களைப் பார்த்து அடிக்கும் சீட்டி என்றும், மற்ற எல்லாவிதமாகவும் அழைக்கிறார்கள்; ஆனால் நினைவில் கொள்ளுங்கள், அது உங்களைத் துரத்திவரும் நரகத்தின் ஒரு வேட்டை நாய்;

நீங்கள் பிரபலமாக இருப்பதாக அது உங்களை நினைக்கச் செய்கிறது. நீங்கள் அப்படி உடையணிந்திருப்பதால் பையன்கள் உங்களைப் பார்த்துச் சீட்டியடிக்கிறார்கள்; பாவம், சிறிய அப்பாவிப் பெண்ணே, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியவில்லை; அது சரி; நீங்கள் பிசாசின் இரையாக இருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியவில்லை.

74 அது பிசாசு; அவனுடைய குரலைக் கேளுங்கள்; ஓ, அவன் எவ்வளவு நன்றாக வேண்டுமானாலும் பேசலாம்; அவன் ஒரு சபையின் போதகராகக்கூட இருக்கலாம். ஆனால் நான் உங்களுக்குச் சொல்லட்டும், ஒரு வெள்ளாட்டின் குரலுக்கும் ஓர் ஆட்டுக்குட்டியின் குரலுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிய ஓர் உண்மையான மேய்ப்பன் தேவை;

இரண்டும் ஒரே மாதிரியாகக் கத்துகின்றன; நீங்கள் ஒரு மேய்ப்பனாக இருந்தால், அதைக் கவனிக்க முடியும். உங்கள் ஆட்டை நீங்கள் அறிந்திருந்தால், அதன் அழைப்பை அடையாளம் காண முடியும்; ஆனால் நீங்கள் அறிந்திருக்காவிட்டால், அவற்றில்

44 இங்கே, அதிக காலத்திற்கு முன்பல்ல, நம்முடைய நாட்டிலுள்ள ஒரு சபையைப் பற்றி எனக்குத் தெரிந்திருந்தது; நாடு முழுவதிலும் அப்படிப்பட்டவை அநேகம் இருக்கின்றன; அவர்கள் வெறுமனே கவலை... எதைப் பற்றியும் கவலைப்படாதவர்களாய் இருக்கிறார்கள். நான் மக்களைத் திட்டிக்கொண்டிருக்கவில்லை; ஆனால், சகோதரனே, மக்களுக்கு நான் கொடுக்கிற செய்திகளுக்காக நியாயத்தீர்ப்பு நாளில் நான் பதில் சொல்ல வேண்டும். தேவன், அவரால் செய்யக்கூடிய ஒரே காரியம்... இல்லை, இந்தத் தேசத்தைக் காப்பாற்ற எதனாலும் முடியாது; அது போய்விட்டது. இந்தக் காலத்தில் உலகளாவிய எழுப்புதல்கள் இருக்க முடியாது; கட்டியெழுப்புவதற்கு எதுவுமில்லை; அது எவ்வளவு அழுகிப்போக முடியுமோ அவ்வளவு அழுகிப்போயிருக்கிறது.

45 நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகச் சாத்தானின் இருப்பிடமாக இருந்த பிரான்சிலுள்ள பாரிஸைப் போன்ற அருவருப்பான, அசுத்தமான ஓர் இடத்தின் நிலைக்கு அது வந்துவிட்டது; பெண்கள், அருவருப்பு, அசுத்தம்! அவர்கள்... இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, நம்முடைய பெண்களுக்கு அணிவிப்பதற்காக அவர்களுடைய ஆடை வடிவங்களை வாங்க நாம் அங்கே செல்வது வழக்கம்; இப்போது நாம் அவ்வளவு தாழ்ந்துபோய்விட்டதால், அவர்கள் தங்களுடைய பெண்களுக்கு அணிவிப்பதற்காக நம்முடைய ஆடை வடிவங்களை வாங்க இங்கே வருகிறார்கள். அது சரி. செய்தித்தாள்களும் பத்திரிகைகளும் அதை எடுத்துப் பரப்புகின்றன; பாவப்பட்ட மக்கள் அதில் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள்.

46 பரிசுத்த ஆவியானவர் செய்துகொண்டிருப்பது ஒன்றே ஒன்றுதான்; தம்மால் மீட்கக்கூடியவர்களை, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை, மீட்டு வெளியே இழுத்துக்கொண்டிருக்கிறார். ஆகவே, என்னைப் பொறுத்தவரை, என் சரீரத்தில் மூச்சு இருக்கும்வரை, நான் உரக்கக் கூவி அந்தக் காரியத்தைக் கண்டிப்பேன். என்னால் அதைத் தடுக்க முடியாது; அது அங்கே இருக்கும் என்று தேவன் கூறியிருக்கிறார். என்னால் அதைத் தடுக்க முடியாது; ஆனால் அதற்கு எதிராக நான் குரல்

கொடுப்பேன்; நியாயத்தீர்ப்பு நாளில் தேவன் தம்முடைய ஒலிநாடாப் பதிவை மீண்டும் இயக்கும்போது, எப்படியாயினும் ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையினால் தங்களுக்குச் சத்தியம் சொல்லப்பட்டது என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள்; தேவன் அதை அடையாளங்களாலும் அற்புதங்களாலும் உறுதிப்படுத்தினார்; பிறகு அது அவர்களுடைய பொறுப்பாக இருக்கும். அது சரி.

47 கேளுங்கள், நண்பரே, தேவன் மனிதனைத் தாகங்கொள்ளும்படி சிருஷ்டித்தார்; தேவன் மனிதனுக்குள் தாகத்தை வைத்தார்; மனிதன் தாகங்கொள்ளும்படி உண்டாக்கப்பட்டான். அந்த ஆசீர்வதிக்கப்பட்ட, பரிசுத்தமான தாகத்தை உலகத்தாலும் பிசாசின் நிகழ்ச்சிகளாலும் தணிக்க முயல்வீர்கள் என்று என்னிடம் சொல்ல வருகிறீர்களா? தேவனை நோக்கித் தாகங்கொள்ளும்படி அவர் உங்களுக்குள் வைத்த அந்தத் தாகத்தை விஸ்கி குடிப்பதினால் தணிக்க முயல்கிறீர்களா? தாகங்கொள்ளும்படி மனிதனுக்குள் ஏதோ ஒன்று இருக்கிறது; மனிதன் தம்மை நோக்கித் தாகங்கொள்ளும்படி தேவன் அந்தத் தாகத்தை உண்டாக்கினார்; ஆனால் நீங்கள் அதைச் சுகபோகத்தினால் தணிக்க முயல்கிறீர்கள்.

48 இந்த அமெரிக்க மக்கள் அந்த ஆசீர்வதிக்கப்பட்ட, பரிசுத்தமான தாகத்தைச் சுகபோகத்தினால் தணித்திருக் கிறார்கள்; வெறித்தனமாக, அது சரி. இந்தக் கடற்கரைகளில் நீங்கள் உங்கள் ஆடைகளைக் களைந்துகொள்கிறீர்கள்; இந்தப் பில்லியர்ட்ஸ் விளையாட்டு அறைகளில் கிடக்கிறீர்கள்; சீட்டு விளையாடுவது, நண்பர்களுடன் சேர்ந்து மதுபானம் அருந்துவது, நீங்கள் செய்கிற இந்த எல்லா முட்டாள்தனங்களும்; சபைக்குச் செல்வதற்குப் பதிலாக, புதன்கிழமை இரவில் வீட்டிலிருந்து தொலைக்காட்சி பார்க்கிறீர்கள். நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? அந்தப் பரிசுத்தமான தாகத்தைத் தணிக்க முயன்றுகொண்டிருக்கிறீர்கள்; ஏதோ ஒரு விதத்தில் அதை நீங்கள் தணித்தாக வேண்டும்; நீங்கள் கிறிஸ்துவைப் புறக்கணிக்கிறீர்கள்; பிசாசு தன் கழிவுக்கூழை உங்களுக்குள்

இருப்பதைக் காண்பீர்கள்; அந்த விலங்கு ஒரு மான். நீங்கள் இயற்கையைக் கவனித்தால், தேவனைக் காண்பீர்கள். அந்த நாட்டில் காட்டு நாய்கள் இருக்கின்றன; அவை மான்களைத் தின்கின்றன;

அவை கூட்டமாக வந்து, மான்களைப் பிடித்துவிடுகின்றன. அவை செய்கிற காரியங்களில் ஒன்று, பின்னால் இருக்கும் சிறிய தசைநாரை, நாம் பின்னங்கால் தசைநார் என்று அழைக்கிற அந்த நரம்புகளை, அறுத்துவிடுவது; அப்படியே ஒரு முழுக் கூட்டத்தையும் வீழ்த்திவிடுகின்றன; பிறகு அவற்றால் ஓட முடியாது. அந்த நாய்கள் தங்களால் முடிந்தவரை தின்னும்; பிறகு மற்ற மான்களால் அதிகத் தூரம் தப்பிச் செல்ல முடியாது. அப்போது அவை எளிதான இரையாகிவிடுகின்றன; அவை நேராகத் திரும்பி ஓடிவந்து அவற்றைப் பிடித்துவிடுகின்றன.

70 பிசாசும் அப்படித்தான் செய்கிறான்; அவன் உங்களை ஜெபக்கூட்டத்திலிருந்து துண்டித்துவிடுவான்; அப்போதே அவன் பின்னங்கால் தசைநார்களை அறுத்துவிட்டான். நீங்கள் இந்தச் சபையிலிருந்து அந்தச் சபைக்குச் செல்வீர்கள்; இங்கிருந்து அங்கே ஓடுவீர்கள்; ஆனால் எந்த நேரத்தில் பிசாசு உங்களை விழுங்க விரும்பினாலும், அவன் உங்களைத் தன் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கிறான்.

சகோதரனே, அவன் உங்கள் ஜெப வாழ்க்கையைத் துண்டிக்கும்போது, நீங்கள் போய்விட்டீர்கள். அது சரி. அவன் அந்தத் தாகத்தை உங்களிடமிருந்து துண்டித்து, உலகத்தின் காரியங்களுக்காக அதைத் திரிபுபடுத்தும்போது, அவன் விரும்புகிற இடத்தில் உங்களை வைத்திருக்கிறான். நீங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரும்வரை, இங்கே விழுங்கிக்கொண்டே செல்ல உங்களை அனுமதிப்பான்; பிறகு அங்கேயே தேவனில்லாமல் உங்கள் வாழ்க்கையை நொறுக்கி முடித்துவிடுவான். நிச்சயமாக அவன் அப்படிச் செய்வான்.

71 இப்போது, அந்த நாய்கள், நரகத்தின் வேட்டை நாய்கள், சபையைத் துரத்துகின்றன. நிச்சயமாக அப்படிச் செய்கின்றன. ஆனால் பாருங்கள், இப்போது உண்மையில், எப்போது...

நீங்கள் இந்தக் காரியங்களையெல்லாம் செய்து, கொஞ்சம் நண்பர்களுடன் பழகி மகிழ்ந்தால் என்றும் பிசாசு உங்களிடம் சொல்லியிருக்கிறான்; பழைய, குறுகிய மனப்பான்மையுள்ள காரியங்கள் நிறைய: "ஏன், அந்தப் பழைய பைத்தியக்காரப் பிரசங்கியார் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டியதில்லை.

அந்த வேதாகமம் உங்களுக்கு வேண்டாம்; அது நான்கு அல்லது ஐந்து முறை மொழிபெயர்க்கப்பட்டது; அதில் ஒன்றுமில்லை. நீங்கள் சபையில் சேர்ந்துகொண்டு ஒரு நல்ல குடிமகனாக இருந்தால் போதும்." அது, பிசாசு உங்களுக்குக் காட்டிய ஒரு கானல்நீரைத் தவிர, உலகத்தில் வேறொன்றுமில்லை. நீங்கள் எப்போதும் உங்கள்மேல் மேலும் மேலும் துயரங்களைக் குவித்துக்கொண்டிருக்கிறீர்கள்.

ஆனால் இரத்தத்தால் நிறைந்த ஓர் ஊற்று இருக்கிறது,

இம்மானுவேலின் இரத்த நாளங்களிலிருந்து எடுக்கப்பட்டது;

அந்தப் பெருக்கின்கீழ் மூழ்கும் பாவிகள்,

உலகத்திற்கான தங்கள் ஆசைகள் அனைத்தையும் இழந்துவிடுகிறார்கள்.

67 "ஏனென்றால், நீங்கள் உலகத்திலோ உலகத்தின் காரியங்களிலோ அன்புகூர்ந்தால், உங்களிடத்தில் தேவனுடைய அன்பே இல்லை." தேவன் உங்கள் ஒவ்வொருவருக்காகவும் வைத்திருக்கும் திருப்தியளிக்கும் பங்கு, விருப்பமுள்ள எவருக்கும் உரியது.

68 தாவீது ஒருமுறை சங்கீதங்களில் எழுதினார்; அவர் சொன்னார், அது 47-ஆம் சங்கீதம் என்று நினைக்கிறேன்; அவர் சொன்னார்:

"மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது."

69 ஓ, அதை நான் நினைக்கும்போது! தாவீது காடுகளில் வாழ்ந்தவராக இருந்ததால்... அந்த நாட்டின் அந்தப் பகுதிக்குச் சென்றால், பல நேரங்களில் ஓடித்திரியும் மான்கள் நிறைய

ஊற்றுகிறான். சரி. நீங்கள் சரியாக இருப்பதாக நினைக்கிறீர்கள்; ஆனால் வேதாகமம், "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரணவழிகள்" என்று கூறுகிறது. மரணம் என்பது முழுமையான அழிவு, பிரிவினை. பிசாசு உங்களுக்குள் வைத்த ஏதோ ஒன்றினால் அந்த ஆசீர்வதிக்கப்பட்ட தாகத்தைத் தணிக்க ஒருபோதும் முயலாதீர்கள். இப்போது, அது மட்டுமல்ல...

49 நீங்கள், "சரி, நான் ஒரு குடிகாரன் அல்ல. நான் ஒரு சூதாடி அல்ல. நான் சுகபோகத்தைத் தேடுகிறவன் அல்ல" என்று சொல்கிறீர்கள்.

50 ஆனால், சகோதரனே, பிசாசால் ஒரு வழியில் உங்களைப் பிடிக்க முடியாவிட்டால், அவன் வேறொரு வழியில் முயல்வான். தேவன் தம்முடைய ஜீவனுக்காக உங்களுக்குக் கொடுத்த தாகத்தை, பிசாசு தன்னுடைய வகையான ஜீவனால் தணிக்க முயன்றிருக்கிறான். அவன் உங்களைச் சபையில் சேர அனுமதித்திருக்கிறான்; ஆர்ப்பரிக்க அனுமதித்திருக்கிறான்; அந்நியபாஷைகளில் பேச அனுமதித்திருக்கிறான்; எல்லா வகையான வெளிப்பாடுகளையும் செய்ய அனுமதித் திருக்கிறான்; இருந்தாலும் நீங்கள் பிசாசின் கழிவுக்கூழ் நிறைந்த பன்றிப்பட்டிகளிலிருந்துதான் குடித்துக் கொண்டிருக்கிறீர்கள். முற்றிலும் சரி.

51 ஒரு மனிதன் தேவனை நோக்கித் தாகங்கொள்ளும்போது, அவனுடைய முழு உள்ளமும் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறது. இன்றைக்கு மக்கள் சுற்றித்திரிந்து, சபைகளில் சேர்ந்துகொண்டு, பிசாசைப் போல வாழ்கிறார்கள்; அந்தத் தாகத்தைத் தணித்துவிட்டதாக நினைக்கிறார்கள்: "நான் சபைக்குப் போகிறேன்; அதோடு காரியம் முடிந்துவிட்டது."

அவர்கள் ஈஸ்டர் நாளில் வரும்போது, பலமுறை நான் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன்; பொதுவாக அப்போதுதான் எல்லாரும் தங்கள் புதிய தொப்பியைக் காட்ட விரும்புகிறார்கள்; அவர்கள் ஈஸ்டர் நாளில் வருவார்கள்; அப்போதே அவர்களுக்கு மகிழ்ச்சியான கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை நீங்கள்

சொல்லிவிடலாம்; ஏனென்றால் அடுத்த ஈஸ்டர் வரை அவர்களை மறுபடியும் பார்க்கமாட்டீர்கள்;

இருந்தாலும் அவர்கள் சபையின் அங்கத்தினர்கள். அவர்கள் அந்த ஸ்தாபனத்தின் அங்கத்தினர்கள்; ஆனால் சபையின் ஓர் அங்கத்தினர் தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறந்தவர்; அவர்களுடைய ஆத்துமா அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைக்கும். தம்மை நோக்கித் தாகங்கொள்ளும்படி தேவன் உங்களுக்குக் கொடுத்த அந்த ஆசீர்வதிக்கப்பட்ட, பரிசுத்தமான தாகத்தை நீங்கள் திரிபுபடுத்தி, அதற்கு வேறொன்றைக் கொடுக்கிறீர்கள். அந்தப் பசி, நீங்கள் செய்ய விரும்புகிற அந்தக் காரியம், அது எதற்காகத் தாகங்கொள்கிறது என்பதைச் சோதித்துப் பாருங்கள்; அது எதை நாடுகிறது என்பதைப் பாருங்கள்.

52 இங்கே தாவீது கூறியதைக் கேளுங்கள்:

"...தண்ணீரற்ற வறண்ட... நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது..."

53 ஓ, தண்ணீரற்ற வறண்ட நிலத்தில் இருப்பதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? அது ஒரு... ஒரு மீனைத் தண்ணீரிலிருந்து வெளியே எடுப்பதைப் போன்றது; அது சீக்கிரத்தில் அதைக் கொன்றுவிடும். தேவனுடைய உண்மையான, மறுபடியும் பிறந்த பரிசுத்தவானுக்கு, காலையில் எழுந்திருக்கும்போது ஒருமுறை மட்டும் அல்ல, நாள் முழுவதும் அந்த ஆசீர்வதிக்கப்பட்ட தாகம் தேவனை நோக்கிக் கூப்பிடுகிறது.

ஆனால் நீங்கள் ஜெபிப்பதற்குப் பதிலாக, உங்கள் நரம்புகளை அமைதிப்படுத்த ஒரு சிகரெட் புகைப்பீர்கள்; சபையின் ஓர் அங்கத்தினராக இருந்துகொண்டு, தேவன் உங்களை அமைதிப்படுத்த அனுமதிப்பதற்குப் பதிலாக, உங்கள் நரம்புகளை அமைதிப்படுத்த, நண்பர்களுடன் சேர்ந்து கொஞ்சம் மதுபானம் அருந்துவீர்கள்; உங்களை ஒரு கிறிஸ்தவர் என்று அழைத்துக்கொள்வீர்கள். அவரை நேசியுங்கள்.

63 பலமுறை நான் பாலைவனத்திற்குள் சென்றிருக்கிறேன்; அங்கே சவாரி செய்து, என் குதிரையை நான் நடத்திக்கொண்டு செல்ல வேண்டிய ஓர் இடத்திற்குச் சென்றிருக்கிறேன். பாவம், அதற்குத் தண்ணீர் மிகவும் குறைந்துபோயிருந்தது; குதிரைக்கோ எனக்கோ குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. நாங்கள் எவ்வளவாகத் தாகங்கொள்வோம்! "ஓ, திரும்பிச் செல்வதற்கு எங்கேயாவது ஒரு பாதையை மட்டும் என்னால் கண்டுபிடிக்க முடிந்தால்!"

பிறகு, நீங்கள் அந்த நிலைக்கு வரும்போது, பிசாசு உங்களுக்குக் கானல்நீர்களைக் காட்டத் தொடங்குகிறான். கானல்நீர் என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் எப்போதாவது சாலையில் சென்றுகொண்டிருக்கும்போது, சாலையின்மேல் சூரிய ஒளி படுவதைக் கண்டு, அது நிறையத் தண்ணீர் இருப்பதுபோலத் தோன்றுவதைப் பார்த்திருக் கிறீர்களா? ஓ, அது உங்களை ஏமாற்றிவிடும்.

64 இங்கே, அதிக காலத்திற்கு முன்பல்ல, கனடாவிலிருந்து வந்துகொண்டிருந்த ஒரு கூட்டம் வாத்துகள், அல்லது வாத்துப் பறவைகள், சாலையில் அப்படிப்பட்ட ஒன்றைக் கண்டு, சாலையில் இறங்கி விழுந்ததைப் பார்த்தேன்; அவை அனைத்தும் வெடித்துப் பிளந்துபோயின; அது தண்ணீர் என்று அவை நினைத்தன.

65 ஓ, பிசாசு மக்களுக்காக அநேக கண்ணிகளை வைத்திருக்கிறான். அது அப்படியே தோன்றுகிறது. தாகங்கொண்ட மக்கள் இந்த இடங்களை நோக்கி ஓடி, அவற்றில் விழுவதை நான் பார்த்திருக்கிறேன்; பாருங்கள், தாங்கள் தண்ணீரில் இருப்பதாக நினைக்கிறார்கள்; அது பெரிதாக ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீரைப் போலவே தோன்றுகிறது; அது தண்ணீர் என்று நினைத்துத் தங்கள் தலையின்மேல் கொஞ்சம் அள்ளிப் போடுகிறார்கள்; ஆனால் அது சூடான, எரிகிற மணலைத் தவிர வேறொன்றுமில்லை.

66 சிறு பெண்மணியே, சகோதரியே, நீங்கள் இந்தக் காரியங்களையெல்லாம் செய்தால் என்றும், சகோதரனே,

அங்கத்தினராகி, உலகத்தைப் போல வாழ்கிறீர்கள்; நீங்கள் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்று தேவன் எண்ணினாரோ, அதையே திரிபுபடுத்துகிறீர்கள்.

அவரைப் போல இருக்கவும், அவரை நேசிக்கவும், அவரை நோக்கித் தாகங்கொள்ளவும் தேவன் உங்களுக்குள் வைத்த அந்தத் தாகத்தை, போதகர்களும், சபைகளும், நீங்களும்— நீங்கள் பயன்படுத்தும்படி தேவன் நியமித்த அந்த அற்புதமான, ஆசீர்வதிக்கப்பட்ட காரியத்திலிருந்து உங்களை நீங்களே விலக்கிக் கொள்ளையிட்டிருக்கிறீர்கள்; அந்தத் தாகத்தை. தாகங்கொள்ளுதல்! தாகங்கொள்ளுதல்!

61 ஓ, பெந்தெகொஸ்தே சபை, ஏதோ ஒரு சுவிசேஷகரையோ, ஏதோ ஓர் உணர்ச்சியையோ, ஏதோ ஒரு சிறிய கொள்கையையோ, ஒரு சிறிய உணர்வையோ பின்தொடர முயல்வதற்குப் பதிலாக, தேவனில் மட்டுமே தன் தாகத்தைத் தணித்துக்கொண்டால், அது எவ்வளவு மேம்பட்ட நிலையில் இருக்கும்! உணர்வுகளையும், சிறிய வரங்களையும், அதுபோன்ற காரியங்களையும் பின்தொடருவதற்குப் பதிலாக, தெய்வீக அன்பில் பரிசுத்த ஆவியானவரைப் பின்தொடருங்கள்; நீங்கள் எவ்வளவு மேம்பட்ட நிலையில் இருப்பீர்கள்! நீங்கள் வரங்களைத் தேடி ஓடுவதைத் தேவன் விரும்பவில்லை; நீங்கள் அவரை நோக்கித் தாகங்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

62 கவனியுங்கள், தாவீது ஒரு சங்கீதக்காரனாக இருந்ததால், மீண்டும் சொன்னார்; அவர் காடுகளில் வாழ்ந்தவர்; அவர் காடுகளில் வாழ்ந்தார்; காடுகளில் இருப்பது என்றால் என்ன என்பதை அறிந்திருந்தார்; அமர்ந்த தண்ணீர்களையும், பசுமையான புல்வெளிகளையும், நிழலான இடங்களையும் பற்றி அவர் எப்போதும் எழுதினார். அவை என்ன என்பதை அவர் அறிந்திருந்தார்; ஏனென்றால் ஒரு மேய்ப்பன் அந்தக் காரியங்களைக் கண்டுபிடிக்க வேண்டும்; அந்த அழகான இடங்கள் எங்கே இருக்கின்றன என்பதை அவன் அறிந்திருக்க வேண்டும்.

54 தேவனை நோக்கித் தாகங்கொள்ளும்படி அவர் உங்களுக்குள் வைத்த அந்தத் தாகத்தைத் திருப்திப்படுத்த, நீங்கள் வெளியே சென்று, வேறொரு மனிதனை உங்கள் கைகளால் அணைத்துக்கொள்வீர்கள்; "கொஞ்சம் களங்கமில்லாத கேளிக்கை" வைத்துக்கொள்வீர்கள்; மறைவாக ஒரு சந்திப்பு, பிற்பகலில் பின்வாசலருகே ஒரு சிறிய முத்தம். நீங்கள் வேறொரு மனிதனின் மனைவியை அழைத்துக்கொண்டு, அவளுடன் ஓடிப்போய், அவளுடன் ஒரு விடுதியில் வாழ்ந்து, அப்படியே நடந்துகொள்வீர்கள்.

நீங்கள் அதைச் செய்கிறீர்கள் என்று நான் சொல்லவில்லை; அப்படிப்பட்டவர் இங்கே இருக்கலாம்; நீங்கள் அப்படிப்பட்டவராக இருந்தால், தேவன் இதை உங்கள் ஆத்துமாவில் எரியும்படி பதிக்கட்டும்; அது சரி; "கொஞ்சம் களங்கமில்லாத கேளிக்கை" அனுபவித்துக்கொண்டிருப்பதாக நினைக்கிறீர்கள். எல்லாவற்றையும் காணும் ஒரு கண் உங்களைக் கவனித்துக்கொண்டிருக்கிறது.

வேறு பெண்கள் அரைகுறையான ஆடைகளுடன் தெருக்களில் மேலும் கீழும் நடக்கும்போது, அவர்களை நோக்கி உங்கள் இச்சைகள் கொழுந்துவிட்டு எரியும்படி பிசாசு முயன்றுகொண்டிருக்கிறான்; நீங்கள் அவர்களை நீண்ட நேரம் உற்றுப் பார்க்கிறீர்கள்; அங்கே சிறிய, அசுத்தமான ஆடைகளை அணிந்திருக்கும் அந்தச் சிறிய, அசுத்தமான, அருவருப்பான, துர்நாற்றமுள்ள பெண்களைப் பார்த்து, கிட்டத்தட்ட விபத்துக்குள்ளாகிறீர்கள்.

55 உங்கள் மனைவி அப்படிச் செய்ய அனுமதிக்கிற ஆண்களே, அது நீங்கள் எதனால் உருவாக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதைக் காட்டுகிறது; நீங்கள் எப்படிப்பட்ட மனிதர் என்பதைக் காட்டுகிறது. ஒரு மனிதன் குடும்பத்திற்குத் தலைவன்; அவன் வீட்டிற்குத் தலைவன்; ஆனால் இன்றைக்கு பெண் வீட்டிற்குத் தலைவி, தொழிற்சாலைக்குத் தலைவி, சபைக்குத் தலைவி, மற்ற எல்லாவற்றுக்கும் தலைவி; ஏனென்றால் அது பாவத்தின் ஒரு கலவையாகிவிட்டது. சாத்தான் ஏவாளைப் பயன்படுத்தினான்;

இன்னும் அவளைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறான். அமெரிக்கா ஒரு பெண்ணின் தேசம்.

56 அதிக காலத்திற்கு முன்பல்ல, ஜெர்மனியில், அல்லது சுவிட்சர்லாந்தில், ஒரு பெண்மணி என்னிடம் சொன்னார்; ஒரு கிறிஸ்தவப் பெண்மணி, "சகோதரர் பிரன்ஹாம் அவர்களே, நான் அமெரிக்காவுக்குச் செல்ல விரும்புகிறேன்; அங்கே பெண்கள் உண்மையாகவே, சரி, அவர்களுக்கு அங்கே அதிக ஆதிக்கம் இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன்" என்றார். சுவிட்சர்லாந்தில் அப்படியில்லை. இல்லை, ஐயா. "சரி, எங்களுக்கு எந்த..."

நான், "ஆனால் இதைத்தான் அது தொடர்ந்து கொண்டுவருகிறது: அது விபசாரத்தை ஏற்படுத்துகிறது" என்றேன்.

57 இங்கேயே சிகாகோவில், உங்கள் செய்தித்தாளின்படி, ஒவ்வொரு நாளும் இரண்டாயிரம் கருக்கலைப்புச் சம்பவங்கள் நிகழ்கின்றன. இரண்டாயிரம் கருக்கலைப்புச் சம்பவங்கள்! அசுத்தத்தினால் ஒவ்வொரு நாளும் இரண்டாயிரம் குற்றமற்ற குழந்தைகள் இறக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் உங்களுக்கு எப்படி ஓர் எழுப்புதல் இருக்க முடியும்?

நேற்றிரவு எத்தனை விபசாரிகள் தெருவுக்குச் சென்றார்கள்; ஆண்கள் வேறு பெண்களுடன், பெண்கள் வேறு ஆண்களுடன்; சிறு பெண்கள் தங்கள் ஒழுக்கத்தை விற்று, தெருக்களில் மேலும் கீழும் அலைந்து, கடைசியில் இங்கேயுள்ள சீரழிந்தவர்கள் வாழும் பகுதியில் வந்து முடிகிறார்கள்?

நேற்றிரவு நான் சிகாகோ நகரத்தின் வழியாக நடந்து சென்று, என்ன நடந்துகொண்டிருந்தது என்பதைப் பார்த்தேன். அப்படிப்பட்ட ஒன்றின்மீது பரிசுத்த ஆவியானவர் ஓர் எழுப்புதலைப் பரவச் செய்வார் என்று நீங்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்? நங்கூரமிடுவதற்கு அதற்கு ஓர் இடம் இருக்க வேண்டும்.

58 அவர்கள் இங்கே காலையில் சபைகளுக்குச் சென்று, ஏதோ ஒன்றைப் பற்றிய ஒரு சிறிய, செல்லமாகத் தட்டிக்கொடுக்கும்

பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு, வீட்டிற்குத் திரும்பிச் சென்று, தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று நினைக்கிறார்கள்; சபையையும் சீக்கிரமாக மூடிவிடுகிறார்கள். ரோஜாக்களைப் பற்றியோ, அடுத்த ஜனாதிபதி யாராக இருப்பார் என்பதைப் பற்றியோ, அல்லது அதுபோன்ற ஏதோ ஒன்றைப் பற்றியோ, போதகர் இருபது நிமிடங்களுக்கு மேல் பிரசங்கித்தால், அவரை நீக்கிவிட்டு ஒரு புதியவரை நியமிப்பார்கள்.

மாய்மாலம் நிறைந்த, நரகத்தை நோக்கிச் செல்லும், அருவருப்பான, சுகபோகத்தைத் தேடும் அந்தக் கூட்டம்! அவர்கள் "துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப் பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும்; இணங்காத வர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்க மில்லாதவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும்" இருப்பார்கள் என்று வேதாகமம் கூறுகிறது.

59 தேவனே, பழைய காலத்துக் கிறிஸ்தவத்தை, மறுபடியும் பிறந்த அனுபவங்களை, அந்தத் தாகத்தை எங்களுக்குத் தாரும். அந்தத் தாகம் உங்களுக்குள் இருக்கிறது; ஆனால் அது ஒரு நோக்கத்திற்காக இருக்கிறது.

60 பெண் ஆணுக்காகப் பெண்ணாக உண்டாக்கப்பட்டாள்; ஆண் பெண்ணுக்காக உண்டாக்கப்படவில்லை; பெண் ஆணுக்காக உண்டாக்கப்பட்டாள். ஆனால் ஒரு பெண் ஓர் ஆணுக்காக உண்டாக்கப்பட்டாள்; ஆண்களுக்காக அல்ல, ஓர் ஆணுக்காக. ஆண்கள், அநேகர் அல்ல; ஒருமை. அது சரி. ஆனால் அவர்கள் தங்கள் ஒழுக்கத்தை விற்கும்போது, தங்களை அவமானத்திற்குள்ளாக்கும்போது, ஆண்களும் அதையே செய்யும்போது, தேவன் உங்களை ஒரு பெண்ணாகவோ ஓர் ஆணாகவோ உண்டாக்கிய அந்த நோக்கத்தையே நீங்கள் திரிபுபடுத்துகிறீர்கள்.

பிறகு அதை ஜீவன் என்று அழைக்கிறீர்கள்; அது மரணம். பிறகு நீங்கள் சபைக்குச் சென்று, சபையில் சேர்ந்துகொண்டு, சபையில் உங்கள் பெயரைப் பதிவு செய்து, சபையின் ஓர்